தமிழ் மலர் வாசகம்

4



டராமன் கம்பெனி

ராஸ்.... கும்பகோணம்.

தமிழ் மலர் வாசகம்

நான்காம் புத்தகம்

வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார்
தமிழாசிரியர்
அர்ச். சூசையப்பர் கல்லூரி உயர்நிலைப்பள்ளி
திருச்சிராப்பள்ளி

Printed on White Printing Paper: D/C 24 lbs.

V.S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

 [விலை ரூ. 0—75 ந. பை.

Printed : Oct. '58

முன்னுரை

அரசியலார் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாட இயலை முற்றிலும் தழுவி அமைக்கப் பெற்றதாகும் இப்புத்தகம்.

இளஞ்சிறுவர்களுக்கு இன்பமளிக்கும் முறையில் படங்கள், கதைகள், பாட்டுக்கள், நாடகம், செய்தித்தாள், கடிதங்கள் இவை பற்றிய பாடங்கள் இந் நூலில் தரப்பட்டுள்ளன. அன்றாடப் பழக்கத்திலுள்ள சொற்களோடு நிற்காமல், சிறுவர்களுடைய சொல்வளத்தைப் பெருகச்செய்யும் பொருட்டு இலக்கியம், அறிவுக்கலை இவைபற்றிய சொற்களும் இவ் வாசகத்தில் விரவிவந்துள்ளன.

சிறுவர்களின் தன்முயற்சியைத் தூண்டும் பொருட்டு, புதுமுறைப் பயிற்சிகள் ஒவ்வொரு பாடத்தின் இறுதியில் அளிக்கப்பட்டுள்ளன. 'தெரிந்துகொள்' என்னும் தலைப்பின் கீழ் இலக்கணக் குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

தமது அரிய பாடல்களை இப்புத்தகத்தில் சேர்த்துக்கொள்வதற்கு மனங்கனிந்து உடன்பாடு வழங்கிய பேரறிஞர்களுக்கு எமது நன்றி உரியதாகும்.

சீரிய முறையில் தொகுக்கப்பட்டுள்ள இந்த நான்காம் வாசகம் எங்கும் நிலவி, இளஞ்சிறார்க்கு நற்பயன் அளிக்கும் வண்ணம் தமிழன்னை இன்னருள் புரிவாளாக!

ஆசிரியர்

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே

தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

நாட்டு வணக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும்
ஆட்சிசெலுத்துகிறாய்.


நின்திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்

திராவிடத்தையும் ஓரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக்கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவைநின் ஆசியை வேண்டுகின்றன;
நின்புகழைப் பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி. வெற்றி, வெற்றி.



நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை

தமிழ் மலர் வாசகம்

நான்காம் புத்தகம்

---

1. நல்வாழ்வு

நமது வாழ்க்கை அலுவல்களைச் செவ்வனே செய்து மகிழ்ச்சியுடன் வாழ்வதே நல்வாழ்வு ஆகும். இவ்வித நல்வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது உடல் நலமே.

நம்மில் சிலர் பணத்தினால்தான் இன்பம் பெறலாமென்று கருதுகின்றனர். பணம் இருந்தும் எத்தனையோ மக்கள் துன்பமும் துயரமும் அடைந்து வருந்துவதை நாம் காண்கிறோம். பலவகைச் செல்வங்கள் பெற்றிருந்தாலும் நோயாளிகள் வாழ்க்கை இன்பங்களை நுகர இயலாது. இதனால்தான் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழி ஏற்பட்டுள்ளது.

மேலும், பிணியுள்ளவர்கள் தாம் வருந்துவதோடு, தமது இனத்தாருக்கும் கவலையும் துயரமும் விளைவிக்கிறார்கள்.

பிறருக்கு உதவி புரியவும், தாய்நாட்டின் நன்மைக்கு உழைக்கவும் அவர்கள் உடல் உறுதி இன்றி மக்கள் தொகுதிக்கே ஒரு சுமையாக இருப்பர். ஆதலால், இளம்பருவ முதற்கொண்டே உடம்பைப் பாதுகாத்து, உடல்நலத்தைக் கருத்துடன் பேணிவருவது நமது முதற் கடமையாகும்.

உடலும் உள்ளமும் தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்யும் நிலையிலிருப்பது உடல் நலம் எனப்படும். உடலின் இன்ப துன்பங்களை உணர்வது உள்ளமே. ஆதலால், நமது உடல் நலமாக இருந்தால்தான் உள்ளம் நலம் பெறும்; உள்ளம் நலமாக இருந்தால்தான் உடல் நலம் பெறும். எனவே, நமது உடல், உள்ளம் இவ்விரண்டின் நலத்தையும் நாம் பெற முயல வேண்டும்.

உடல் நலம் பெறுவதற்கு விடியற் காலையில் எழுதல், வெட்டவெளியில் உலாவி வருதல், பல் துலக்கல், குளிர்ந்த நீரில் குளித்தல், தூய ஆடை அணிதல், சத்துள்ள உணவைப் புசித்தல், பிறகு அவரவர்க்குரிய தொழிலைச் செய்தல், மாலையில் விளையாடுதல், இரவில் அயர்ந்து தூங்குதல் இவைகளை

ஒவ்வொரு நாளும் முக்கியக் கடமைகளாகக் கருதிக் கடைப்பிடிக்கவேண்டும். இவ்வித உடல்நலப் பழக்கவழக்கங்களை இளமையிலிருந்தே அமைத்துக்கொண்டால்தான் நல் வாழ்வு ஏற்படும்.

உள்ளம் நலம்பெற நல்லொழுக்கம் தேவையாகும். எப்பொழுதும் உண்மை பேசுதலும், எவரிடத்தும் அன்பாய் இருத்தலும் நல்லொழுக்கத்திற்கு அடிப்படையானவை. களவு, கோபம், பொறாமை, பேராசை இவற்றை அறவே ஒழித்துவிட வேண்டும். எவ்விதத் துன்பம் நேரிட்டாலும் மன உறுதியையும் அஞ்சாமையையும் கைவிடக்கூடாது. தூய எண்ணங்களையே நினைக்கவேண்டும்; தூய சொற்களையே பேசவேண்டும்; தூய செயல்களையே செய்ய வேண்டும். சீரிய உடல்நலப் பழக்கங்களும் நல்ல ஒழுக்கமும் நீங்கள் இளமையிலிருந்தே பெறுவீர்களானால் நல்வாழ்வாகிய இன்ப வாழ்வு கைகூடும்.

பயிற்சி

1. சொல்வளம்:

இன்றியமையாது = இல்லாமல் முடியாது; மக்கள் தொகுதி = சமூகம்; பேணிவருவது = காத்து வருவது.

எதிர்ச்சொற்கள் :

இன்பம் × துன்பம். நன்மை × தீமை.
குறைவு × நிறைவு. இளமை × முதுமை.

2. வினாக்கள் :

1. எவ்வித வாழ்வு நல்வாழ்வு ஆகும்?

2. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'—விளக்குக.

3. நோயுள்ளவர் சமூகத்திற்கு எவ்விதம் ஒரு சுமையாவர்?

4. உடல்நலம் என்பது யாது?

5. அன்றாடம் நாம் கடைப்பிடிக்க வேண்டிய உடல்நலப் பழக்கவழக்கங்களைக் கூறுக.

6. நல்லொழுக்கத்துக்கு அடிப்படையான பண்புகள் யாவை?

3. தெரிந்துகொள் :

நாம் தூய சொற்களையே,—இதில் மூன்று சொற்கள் இருக்கின்றன; ஆனால் கருத்து முடியவில்லை.

நாம் தூய சொற்களையே பேசவேண்டும்.—இதில் கருத்து முடிவுபெற்றிருக்கிறது.

பல சொற்கள் தொடர்ந்து நின்று முடிவடைந்த கருத்தைத் தெரிவிப்பது **வாக்கியம்** எனப்படும். வாக்கியத்தின் முடிவில் **முற்றுப்புள்ளி** இடவேண்டும்.

பல வாக்கியங்கள் தொடர்ந்து நின்று **பத்தி** ஆகும்.

இந்தப் பாடத்தின் முதல் பத்தியில் எத்தனை வாக்கியங்கள் இருக்கின்றன?

2. நல் ஒழுக்கம்

1. அன்பை வளர்க்கவேண்டும்—கிளியே!
அறிவைப் பெருக்கவேண்டும்;
உன்போல் பிறரையெண்ணி—நல்ல
உதவி புரியவேண்டும்.

2. தெய்வ நினைப்புவேண்டும்—கிளியே!
தேச நினைப்புவேண்டும்;
மெய்ம்மை யொழுக்கம்வேண்டும்—நெஞ்சில்
வீர உறுதிவேண்டும்.

3. அன்னைசொல் கேட்கவேண்டும்—தந்தை
ஆணைக் கிணங்கவேண்டும்;
தன்னை வணக்கவேண்டும்—பிறர்
தம்மை மதிக்கவேண்டும்.

4. ஆசிரி யர்க்கடங்கி—கிளியே!
அறிவை வளர்க்கவேண்டும்;
தேசம் வாழுந்தொழிலில்—மிக்க
திறமை ஓங்கவேண்டும்.

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

பயிற்சி

1. சொல்வளம் :

இளியே=இளிபோன்ற குழந்தையே; மெய்ம்மை யொழுக்கம் = உண்மையான நல்லொழுக்கம்; ஆணை = கட்டளை; இணங்கவேண்டும்=கீழ்ப்படிய வேண்டும்; தன்னை வணக்கவேண்டும் = தான் பிற ரிடம் பணிவு உடையவனாக இருக்கவேண்டும்.

2. வினாக்கள் :

1. நாம் பிறருக்கு என்ன செய்யவேண்டும்?

2. எந்த இரண்டையும் நாம் எப்பொழுதும் நினைக்கவேண்டும்?

3. தாய், தந்தை, ஆசிரியர் இவர் சொல்லுக்கு என்ன செய்யவேண்டும்?

3. கோடிட்ட இடங்களை நிரப்பு :

அன்பை ——— வேண்டும்.
——— பெருக்கவேண்டும்.
——— ஒழுக்கம் வேண்டும்.
தன்னை ——— வேண்டும்.

4. முந்திய பாடத்துக்கும் இந்தப் பாடத்துக்கும் வேறுபாடு தெரிகிறதா? முந்திய பாடம் உரைநடை அல்லது வசனம் ஆகும். இந்தப் பாடம் செய்யுள். வசனத்தை இசையுடன் பாடமுடியுமா? செய்யுளைப் பாடமுடியுமல்லவா?

இந்த வாசக புத்தகத்தில் உரைநடைப் பாடங்களும் செய்யுட் பாடங்களும் கலந்து வருவதைப் பார்த்து அறிக.

3. தமிழ் வளர்த்த தாய்

நாம் பிறந்தது முதல் பேசிவருவது **தமிழ்மொழி**. ஆதலால், தமிழ் நமக்குத் **தாய்மொழி**. நமக்குத் தாய்மொழி தமிழாகை யால் நாம் **தமிழர்கள்** எனப்படுகிறோம். தமிழர்கள் வசிக்கும் நாடு **தமிழ் நாடு**. தமிழ் நாட்டைத் **தமிழகம்** என்றும் சொல்வ துண்டு. அது வடக்கில் திருப்பதி மலை முதல் தெற்கில் கன்னியாகுமரி வரையில் பரவியுள்ளது.

பண்டைக் காலத்தில் தமிழகம் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருந்தது. அவற்றைச் சேரர், சோழர், பாண்டியர் என்னும் தமிழ் அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களுக்குத் 'தமிழ் நாட்டு மூவேந்தர்' என்று பெயர்.

முற்காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்த பல பெரும் புலவர்களுள் **ஔவையார்** என்னும் பெண்மணி ஒருவராவர். 'ஔவை' என்ற சொல் 'தாய்' என்ற பொருள் தரும். இவர் நெடுங்காலம் வாழ்ந்து, தமிழ்ப்பணி புரிந்து வந்தமையால் இவரைத் 'தமிழ் வளர்த்த தாய்' என்று அழைப்பதுண்டு.

கீழ் வகுப்புக்களில் நீங்கள் படித்துள்ள **ஆத்திசூடி, கொன்றைவேந்தன்** முதலிய நீதி நூல்களே இயற்றியவர் ஔவை மூதாட்டியே ஆவார். இவர் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர் என்று கருதப்படுகிறது. விநாயகக் கடவுளிடம் இவருக்குப் பற்று மிகுதி என்றும், அவர் அருளால் இவர் பல விந்தைகள் நிகழ்த்திஞர் என்றும் சொல்லப்படுகிறது.

கவியரசியாகிய ஔவையார் துறவியைப்போல் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார். கால்நடையாகவே நடந்து, தமிழகம் முழுவதும் ஊர் ஊராகத் திரிந்து ஆங்காங்குத் தமிழ் மொழியையும், தமிழரின் நற் பண்பாடுகளேயும் பரவச் செய்தார்; நன்னெறியை ஓங்கச் செய்தார்.

'சாதி யிரண்டொழிய வேறில்லே' என்று தாம் கூறிய வண்ணம், ஔவையார் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எல்லோரிடமும் ஒரே தன்மையாகப் பழகி, நட்புக்கொண்டு வாழ்ந்துவந்தார். தமிழ் நாட்டு மூவேந்தரும், செல்வர்களும் இவரைப் பெரிதும் கொண்டாடி ஆதரித்துவந்தார்கள். பசித்த பொழுது ஏழைகளின் குடிசைகளிலும்

சென்று அன்புடன் அளிக்கப்பட்ட கூழை யும் விரும்பிப் பருகுவார். தம் நன்றிக்கு அறிகுறியாக அவர்களைப் பற்றிப் பாடல்கள் பாடுவார். இதனால் ஒளவையாரைக் 'கூழுக்குப் பாடியவர்' என்றும் சொல்வ துண்டு.

ஒளவையாரின் பாடல்கள் எளிய நடை யில் அமைந்துள்ளன ; அரிய நீதிகளை உணர்த்துவன. அப்பாடல்களைச் சிறுவர் முதல் முதியோர் வரை இருபாலரும் படித் தறியலாம். இளைஞர்களே! அவற்றைப் படித்துப் பின்பற்றுவதால் நீங்கள் பெரிதும் நன்மை யடைவீர்கள்.

பயிற்சி

1. சொல்வளம் :

நன்னெறி = (நன்மை + நெறி) நல்லொழுக்கம் ; மூதாட்டி = வயது முதிர்ந்தவள் ; பண்பாடுகள் = நற்குண நற்செயல்கள் ; இருபாலரும் = ஆண்களும் பெண்களும் ; பருகுவார் = குடிப்பார் ; வேந்தர் = அரசர் ; பற்று = பக்தி ; துறவி = சந்நியாசி ; சாதியிரண்டு = இரந்தவருக்குக் கொடுப்பவர் (மேல் சாதி), கொடாதவர் (கீழ் சாதி) எனும் இரு பிரிவினர்.

2. வினாக்கள் :

   1. தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
   2. தமிழ் நாட்டு மூவேந்தர் யாவர்?

3. ஔவையாரை ஏன் 'தமிழ் வளர்த்த தாய்' என்பர்?

4. அவர் இயற்றியுள்ள நீதி நூல்கள் இரண்டின் பெயர்களைச் சொல்.

5. ஔவையாரைக் 'கூழுக்குப் பாடியவர்' என்று ஏன் அழைப்பதுண்டு?

3. தெரிந்துகொள்:

ஔவையார் பல விந்தைகள் நிகழ்த்தினார்.—இது ஒரு வாக்கியம். இந்த வாக்கியத்தில் நான்கு சொற்கள் இருக்கின்றன.

ஔவையார் — இது ஒரு சொல். இந்தச் சொல்லில் **ஔ, வை, யா, ர்** என்ற நான்கு எழுத்துக்கள் இருக்கின்றன.

ஒன்று அல்லது பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்று சொல் ஆகும்.

கை, பை, வா, போ — இவை ஓர் எழுத்துச் சொற்கள்.

ஊர், சிறு, கடை — இவை இரண்டு எழுத்துச் சொற்கள்.


1. மூன்று எழுத்துச் சொற்கள் மூன்று எழுது.
2. நான்கு எழுத்துச் சொற்கள் நான்கு எழுது.
3. இந்த எழுத்துக்களைச் சொற்களாக அமை: **தழ்மி, மரிகு, தழமிம்க, வம்ணண்.**

4. ஔவையாரும் சிறுவனும்

ஔவையாரைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அக் கதைகளில் ஒன்றை இங்குக் காண்போம்.

ஔவையார் ஒரு நாள் வெயில் வேளை யிலே ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போய்க்கொண்டிருந்தார். வழி நடந்த களைப்பினால் ஒரு நாவல் மரத்தின் நிழலில் ஒதுங்கிச் சற்று நின்றார். மேலே அண்ணாந்து பார்த்தபொழுது அந்த மரத் தின்மீது மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் உட்கார்ந்துகொண்டு நாவற் கனிகளைத் தின்றுகொண்டிருந்தான். ஔவையார் தமக்கும் சில நாவற்பழங்கள் பறித்துப் போடும்படி அவனை வேண்டினார். அதற்கு அந்தப் பையன், "பாட்டி! உனக்குச் சுடும் பழங்கள் வேண்டுமா? சுடாப் பழங்கள் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவை யார், "நாவற் பழத்தில் சுடுகின்ற பழமும் இருக்குமோ?" என்று திகைத்தார். ஒன்றும் தோன்றாமையால், "சுடுகிற பழம் எனக்கு வேண்டாம்; வெயில் வேளையாக இருப்ப தால் சுடாத பழமேவேண்டும்", என்று கூறினார்.

உடனே சிறுவன் மரக்கிளை ஒன்றை உலுக்கிவிட்டான். அதிலிருந்து கனிந்த பழங்களும் கனியாத பழங்களும் கீழே



ஔவையாரும் சிறுவனும்

உதிர்ந்தன. அப்பொழுது ஔவை மூதாட்டி கனிந்த பழங்களிற் சிலவற்றைப் பொறுக்கி

யெடுத்தார். அவற்றில் மணல் ஒட்டிக் கொண்டிருந்தமையால் அம்மணலைப் போக்கும்பொருட்டு அவற்றை அவர் வாயினால் ஊதினார். அதைப் பார்த்த சிறுவன், "அம்மையே! நீ சுடாப்பழமல்லவா கேட்டாய்? இப்பொழுது சுடுகிற பழத்தைத் தின்னப் போகிறாயே! வாய் வெந்துவிடப்போகிறது. நன்றாக ஊதி, ஆறின பின்னர்ப் புசி!", என்று சொல்லி நகைத்தான்.

ஔவையார் சுடாத பழம் என்பது நன்றாய்ப் பழுக்காத பழம் என்றும், சுடும் பழம் என்பது நன்றாகக் கனிந்த பழம் என்றும் தெரிந்துகொண்டார். இக் கருத்து முன்னரே தமக்குத் தெரியாமை குறித்து வெட்கமுற்று மனம் வருந்தினார்.

ஔவையார் வருந்துவதைக் கண்டு மாடு மேய்க்கும் சிறுவன் மரத்தைவிட்டு இறங்கினான். தன் உண்மை உருவைக் காட்டி, தான் முருகக் கடவுள் என்பதை ஔவையாருக்கு உணர்த்தி மறைந்தான். ஔவையாரும் மகிழ்ச்சியுடன் தம் வழியே ஏகினார்.

பயிற்சி

1. சொல்வளம் :

நாவல் + கனி = நாவற்கனி; நாவல் + பழம் = நாவற்பழம். கனிந்த × கனியாத; சுடுகிற × சுடாத.

2. வினுக்கள் :

1. நாவற் கனிகளில் சுடும் பழம் எது? சுடாப் பழம் எது?

2. பழத்தை வாயால் ஊதின ஔவையாரைப் பார்த்துச் சிறுவன் என்ன கூறினுன்?

3. மாடு மேய்க்கும் சிறுவன் தன்னை யாரென்று உணர்த்தினுன்?

3. தெரிந்துகொள் :

மரக்கிளை சிறுவன் உலுக்கிவிட்டான் ஒன்றை.

இங்கே நான்கு சொற்கள் இருக்கின்றன. இவை உரிய வரிசையில் இல்லாமையால் பொருள் விளங்கவில்லை.

சிறுவன் மரக்கிளை ஒன்றை உலுக்கிவிட்டான்.

இவ்வாறு மாற்றி எழுதினுல்தான் பொருள் விளங்கி வாக்கியமாகிறது.

பொருள் விளங்கும்படி மாற்றி வாக்கியமாக எழுது :

சொற்களையே தூயவேண்டும் பேச.
வாழ்வே செல்வம் குறைவற்ற நோயற்ற.
கந்தை கட்டு ஆனுலும் கசக்கிக்.
ஓடும் கன்றுக் துள்ளி குட்டி.
சுட்டால் ஓசை கேட்கும் தோசை.
ஒருவன் ஆண்டி வாங்கினுன் தோண்டி.

5. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. (செந்தமிழ்)

2. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி—என
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

3. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. (செந்தமிழ்)

4 வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

—அமரகவி பாரதியார்

பயிற்சி

1. சொல்வளம் :

வையை = வைகை நதி; பொருநை = தாமிரவருணி; பார்-பூமி; வான்புகழ் = சிறந்த புகழ்; சிலப்பதிகாரம் = கோவலன், கண்ணகி இவர்களின் கதையைக் கூறும் நூல்; மணி ஆரம் = இரத்தினங்கள் பதித்த மாலே.

2. விஞக்கள் :

1. செந்தமிழ் நாடு என்று சொல்லும்போது என்ன நிகழ்கிறது? தந்தையர் நாடென்றபோது என்ன நிகழ்கிறது?

2. தமிழ் நாட்டில் ஓடும் ஐந்து ஆறுகளின் பெயரைக் கூறு.

3. தமிழ் நாட்டிலிருந்து எம்மணம் பாரெங்கும் வீசுகிறது?

4. தமிழ் நாடு எதனுல் பெரும்புகழ் கொண்டதாகும்?

3. தெரிந்துகொள் :

தேன்— இது ஒரு பொருளின் பெயர்.

சிலப்பதிகாரம்— இது ஒரு நூலின் பெயர்.

நாடு, ஆறு, கண்ணுடி, படம்— இவை பொருள்களின் பெயர்கள். பொருள்களின் பெயரைக் குறிக்கும் சொல் **பெயர்ச்சொல்** எனப்படும்.

பாய்கிறது, ஓடு, நட, எழுது— இச்சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு செயல் அல்லது வினையைக் குறிப்பதால் **வினைச்சொல்** எனப்படும்.

6. நெல்லும் சோளமும்

ஒரு மளிகைக் கடையில் பலவகையான தானியங்கள் நிறைந்த சில கூடைகள் இருந்தன. அந்தக் கூடைகள் ஒன்றில் நெல் நிறைய இருந்தது. அதற்கருகில் இருந்த கூடையில் சோளமணிகள் குவியலாக இருந்



மளிகைக் கடை

தன. சோளம், அண்மையிலிருந்த நெல்லை நோக்கி, "நெல்லே! நெல்லே! நீ எந்த ஊரிலிருந்து வந்தாய்?" என்றது.

நெல்: நான் தஞ்சாவூரிலிருந்து வந்தேன்.

சோளம்: அங்கே யார் உன்னைப் பயிராக்கினர்?

நெல்: என்னை ஆறுமுகம் என்பவர் நன்செயில் பயிராக்கினர்.

சோளம்: அவர் உன்னை எப்படிப் பயிராக்கினர்?

நெல்: சொல்லுகிறேன், கேள்.

வாய்க்கால் வெட்டி, வரப்புக் கட்டி,
சாணமிட்டுச் சாம்பல் கொட்டி,
உரத்தை யிட்டே உழுதடித் தாரே;
பரம்பு அடித்தாரே; பார்வையிட்டாரே.
விதைதனை விதைத்தே நீர்தனைப் பாய்ச்சி,
நாற்பதாம் நாளில் நாற்று நட்டார்;
கழனி காத்துக் களைதனை எடுத்தார்.
சோ! மழை சொறிந்து பெருகி நிறைய,
வெயிலும் வீழ, காற்றும் வீசிட,
நீரும் உயர, நிலமும் உயர,
வரப்பும் உயர, வளமும் உயர,
கதிரும் உயர்ந்து தாளும் சாய
நெல்லின் மணியாய் விளைந்தேன் நானே!

சோளம்: நல்லது! உன் வாழ்வு என்ன இன்பமான வாழ்வு!

நெல்: சோளமே! இது மட்டுமா! இன்னும் என்னை என்ன செய்தார்கள், தெரியுமா?

அரிவாள் கதிரும் அறுத்து வரவே,
போரும் அடித்துப் பொதியும் கட்டிச்
செந்நெல் குறையாக் களஞ்சியந் தன்னில்
சேர்த்து வைத்தார் சிறந்த மக்கள்.

சோளம்: நீ தஞ்சாவூரிலிருந்து இங்கே எப்படி வந்தாய்?

நெல்: என்னை மூட்டை மூட்டையாகக் கட்டினார்கள்; புகைவண்டியில் ஏற்றி இந்தப் பட்டணத்திற்குக் கொண்டுவந்தார்கள். சோளமே! நீ எந்த ஊரிலிருந்து வந்தாய்?

சோளம்: நான் சேலத்திலிருந்து வந்தேன்.

நெல்: உன்னை யார் பயிராக்கினர்?

சோளம்: என்னைக் கந்தசாமி என்பவர் புன்செயில் பயிராக்கினர்.

நெல்: அவர் உன்னை எப்படிப் பயிராக்கினர்?

சோளம்: எப்படிப் பயிராக்கினுரா? கேள்.

வெட்டாந் தரையை வெட்டிக் கொத்தி,
மண்ணுங் கட்டியை உடைத்துத் தள்ளி,
சுக்காந் தரையை உழுதடித்தாரே.
சின்னப் பாத்தி கோலி வைத்து
விதைகள் விதைத்து நீரும் பாய்ச்சி
நாற்றுப் பிடுங்கி அகல நட்டார்.
கதிர்கள் தோன்றி நற்பால் கட்ட,
பரண்கள் கட்டிப் பறவை ஓட்டிப்
பாது காத்துப் பாடு படவே
சோள மணியாய் விளைந்தேன் நானே,
ஏழை எளியார் உண்ண வென்றே.

நெல்: உன் பாடு அப்படியாயிருந்தது? அப்புறம் என்ன செய்தார்களோ?

சோளம்: அப்புறம் என்ன செய்தார்கள்? என்னையும் மூட்டையாகக் கட்டிப் புகைவண்டியில் ஏற்றி இந்த ஊருக்கு அனுப்பினுர்கள்.

நெல்: என்ன விந்தை! நாம் எங்கே விளைந்தோம்? முடிவில் எங்கே வந்து சேர்ந்திருக்கிறோம்?

சோளம்: ஆமாம்; எல்லாம் கதையாகத்தான் இருக்கிறது!

பயிற்சி

1. சொல்வளம்:

அண்மையில் = அருகில்; பொதி = மூட்டை; களஞ்சியம் = தானியங்கள் வைக்கும் மரக்குதிர்; வெட்டாந்தரை = உலர்ந்த நிலம்; சுக்காந்தரை = சுண்ணும்பு கலந்த நிலம்; நன்செய் = சேற்றில் பயிர் செய்யும் நிலம். புன்செய் = புழுதியில் பயிர் செய்யும் நிலம்.

2. வினுக்கள்:

1. நெல் விதைகளை விதைப்பதற்குமுன் வயலை எவ்விதம் பண்படுத்துகிறுர்கள்?

2. பயிர் வளர்ந்து வரும்பொழுது என்ன என்ன செய்கிறுர்கள்?

3. கதிர் முற்றிவர என்ன என்ன வேண்டும்?

4. முற்றிய கதிரிலிருந்து நெல்லை எவ்வாறு சேகரிக்கிறுர்கள்?

5. நன்செய், புன்செய் வேறுபாட்டை விளக்குக.

3. இந்தப் பாடத்தில் வந்துள்ள பெயர்ச் சொற்கள் பத்தும், வினைச் சொற்கள் பத்தும் எடுத்து எழுது.

7. பள்ளி ஊழியர் படை

படம் படித்தல் :

24-ம் பக்கத்திலுள்ள படத்தைப் பார்த்து விடை சொல் :

1. இது ஒரு கிராமத்தின் படம் என்று எதனல் அறிகிருய் ?

2. சிறுமி என்ன செய்கிருள் ?

3. வழியில் கிடக்கும் மரத்தை இருவர் என்ன செய்கிருர்கள் ?

4. மண்வெட்டியால் இருவர் என்ன செய்கிருர்கள் ?

5. வழியில் முளைத்திருக்கும் பூண்டுச்செடியை சிறுவன் ஒருவன் என்ன செய்கிருன் ?

கீரனூர் என்னும் கிராமத்தில் ஓர் ஆரம்பப் பாடசாலை இருக்கின்றது. அதில் நான் நான்காம் வகுப்பில் படிக்கிறேன். எங்கள் தலைமை ஆசிரியர் மூன்ரும் வகுப்பிலிருந்து மூவரையும், நான்காம் வகுப்பிலிருந்து நால்வரையும், ஐந்தாம் வகுப்பிலிருந்து ஐவரையும் தேர்ந்தெடுத்துப் **பள்ளி ஊழியர் படை** ஒன்று அமைத்துள்ளார். அப்படையில் நானும் ஓர் ஊழியன். அதில் மூவர் பெண்கள். இந்தப் பள்ளி ஊழியர் படைக்கு எங்களுக்குள்ளேயே ஒரு தலைவன் உண்டு. தலைமை ஆசிரியரும்

வகுப்பு ஆசிரியர்களும் உடன் இருந்து நாங்கள் செய்யும் பணிகளில் உதவி புரிகிறார்கள்.

நாள்தோறும் காலையில் பாடசாலை நேரத்திற்குப் பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே நாங்கள் பள்ளிக்குச் செல்லுகிறோம். வகுப்பு அறைகளையும் சுற்றுப் புறத்தையும் துடைப்பங்களால் பெருக்கித் துப்புரவாக வைக்கிறோம். வகுப்பறைச் சாமான்களையும் படங்களையும் தூசுபோகத் துடைக்கிறோம். அழகுக்காக ஒரு கண்ணாடிக் குவளையில் பூங்கொத்துக்களை நிறுத்தி வகுப்பு மேசையின்மீது வைக்கிறோம்.

வகுப்புப் பிள்ளைகள் வந்ததும், அவர்களின் உடல் தூய்மை, உடைத் தூய்மை இவற்றைச் சோதித்து, வேண்டுவன செய்கிறோம். மாலையில் பள்ளிக்கூடத் தோட்டத்திலுள்ள செடிகளுக்குத் தண்ணீர் விட்டும், களை பிடுங்கியும், உரமிட்டும் பாதுகாக்கிறோம். விளையாடுமிடங்களிலுள்ள குப்பை செத்தைகளையும் பொறுக்கியெறிகிறோம். பிற பிள்ளைகள் விளையாடுவதை மேற்பார்வை செய்கிறோம்.

இவ்வலுவல்களைச் செய்வதில் நாங்கள் சிறு சிறு குழுவினராகப் பிரிந்து, அவைகளைப் பங்கிட்டுக்கொண்டு மாறிமாறிச் செய்துவருகிறோம். ஒவ்வொரு மாதத் தொடக்கத்திலும் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் வேறு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதால் இந்தப் பள்ளி ஊழியர் படை மாற்றி அமைக்கப்படுகிறது. இதனால்



தெருக்களைச் சீர்செய்தல்

ஓராண்டுக்குள் வகுப்பிலுள்ள மாணவ மாணவிகள் எல்லோரும் பள்ளிப் பணிகளில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறு பொது நலத்துக்காகத் தொண்டுசெய்வதில் அனைவரும் பயிற்சி பெறுகின்றனர்.

விடுமுறை நாட்களில் ஆசிரியர்கள் எங்களைக் கிராமத்தின் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று, சாலையைச் சீர்செய்தல், வீதிகளைப் பெருக்குதல், மேடுபள்ளங்களைச் சமப்படுத்தல், பொதுவிடங்களில் முளைத்திருக்கும் பூண்டுச் செடிகளைக் களைந்தெறிதல் முதலிய கிராமப் பொதுநலப் பணிகள் செய்யவும் தூண்டுகிறார்கள். தந்நலம் கருதாது பிறர் நலத்துக்காக உழைத்தல் எங்களுக்குப் பெருமகிழ்ச்சி யளிக்கிறது; எங்கள் வாழ்வும் நல்வாழ்வாக அமைகிறது.

பயிற்சி

1. சொல்வளம்:

துப்புரவாக = தூய்மையாக; குழுவினர் = கூட்டத்தார்; பணி = தொண்டு; தம் + நலம் = தந்நலம்; தன் + நலம் = தன்னலம்.

2. வினாக்கள்:

1. இரனூர்ப் பாடசாலையில் 'பள்ளி ஊழியர் படை' எவ்வாறு அமைத்திருக்கிறார்கள்?

2. இப்படையினர் பாடசாலையை எவ்வாறு துப்புரவாக வைக்கிறார்கள்?


3. பள்ளி ஊழியர்

(*i*) வகுப்புப் பிள்ளைகளுக்கு என்னென்ன செய்கிறார்கள்?

(*ii*) தோட்டத்தில் என்ன செய்கிறார்கள்?

(*iii*) கிராமத்தில் என்னென்ன பணிகள் செய்கிறார்கள்?

8. நம் நாட்டுக் கொடி



கொடியைப் போற்றிக் கும்பிடு
கொடுமை தீரும் நம்பு நீ.

1. அச்சம் போக்கும் கொடிஇது
   ஆண்மை நல்கும் கொடிஇது
   இச்சே கத்து வாழ்வினே
   இன்ப மாக்கும் கொடிஇது. (கொடி)

2. பரத நாட்டின் கொடிஇது
   பழமை யான கொடிஇது
   விரத மாகப் போற்றினல்
   விருப்பம் யாவும் கைகூடும். (கொடி)

3. கட்டு விட்ட மக்களே
   அன்பு கொண்டு கட்டியே
   ஒற்று மைப்ப டுத்தவே
   உறுதி யான கொடிஇது. (கொடி)

4. சாதி பேதத் தீமையைச்
சாம்ப லாக்கும் கொடிஇது
நீதி யான எதையுமே
நின்று காக்கும் கொடிஇது. (கொடி)

—நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை

பயிற்சி

சொல்வளம் :

ஆண்மை = வீரம்; நல்கும் = கொடுக்கும்; இச் செகத்து = இந்த உலகத்து; கட்டுவிட்ட = (அந்நியர் ஆட்சித்) தளை நீங்கிய; பேதம் = வேறுபாடு.

---

9. நன்றி மறவாத கிளி

பண்டைக் காலத்தில் நமது செந்தமிழ் நாட்டில் சித்தர்கள் வாழ்ந்தனர் என்று கூறுவர். சித்தர்கள் என்பவர்கள் துறவிகள்; தவம் செய்து சித்திகள் பெற்றவர்கள். அவர்கள் மனிதர்கள் செய்யமுடியாத விந்தைகளைத் தங்கள் தவத்தின் வலிமையால் நிகழ்த்தக் கூடியவர்கள். அவர்கள் அரிய மருந்துகளைச் செய்து தீராத நோய்களையும் குணப்படுத்தினார்கள் என்று கூறுவர்.

பழனி மலைக்கு அருகே ஒரு பெரிய காடு இருந்தது. ஒரு நாள் ஒரு சித்தர் அந்தக் காட்டின் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்போது ஒரு சிறு ஆற்றங்கரையில்

ஒரு பெரிய மரத்தைக் கண்டார். அதன் கிளைகள் பட்டுப்போயிருந்தன. அம்மரத்திலிருந்த பொந்து ஒன்றில் ஒரு கிளி இருப்பதைச் சித்தர் கண்டார். அக் கிளி இளைத்து வாடியிருந்தது.

சித்தர் அக் கிளியைப் பார்த்து, “மூடக் கிளியே! இலைதழைகளும் காய்கனிகளும் நிறைந்த பசுமையான மரங்கள் பல இருந்தும் அவற்றை எல்லாம் விட்டுவிட்டு இம் மரத்தின்மீது ஏன் வாடியிருக்கின்ருய்?” என்ருர்.



சித்தரும் கிளியும்

அதைக் கேட்ட கிளி, சித்தரைப் பார்த்து, “முனிவரே! முன்பு இந்த மரம் அழகாகத் துளிர்த்துத் தழைத்துப் பல காய் கனிகளோடு விளங்கியிருந்தது. அப்போது நானும் வேறு பறவைகளும் இதில் வாழ்ந்தோம். ஒரு நாள் ஒரு வேடன் நஞ்சு பூசிய

அம்பு ஒன்றை இதன்மேல் எய்தான். அந்த அம்பின் நஞ்சினுல் இம்மரம் பட்டுப் போயிற்று. மரம் பட்டுப் போகவே, இங்கு வாழ்ந்திருந்த மற்றப் பறவைகள் வேறு மரங்களை நாடிப்போய் விட்டன. ஆனுல், எனக்கு மட்டும் இதை விட்டுப் பிரிய விருப்பம் இல்லை" என்றது.

அதற்குச் சித்தர், "உனக்கு ஏன் விருப்பம் இல்லை? இங்கே இரையில்லாமல் இறந்து போவாயே!" என்ருர்.

அதனைக் கேட்ட கிளி, "முனிவர் பெருமானே! நான் இம் மரக் கிளையில் கட்டியிருந்த கூட்டில் பிறந்தேன்; இதன் இலை நிழலில் வளர்ந்தேன்; இதன் பழங்களைத் தின்றேன்; இதன் கிளைகளின் மீதிருந்தே பறக்கவும் கற்றேன். நான் பிறந்ததுமுதல் இன்றுவரையில் வாழ்ந்த இந்த மரம் பட்டுப் போய்விட்டாலும், இதை விட்டுப் போக எனக்கு மனம் வரவில்லை", என்று துயரத்துடன் கூறிற்று.

உடனே, சித்தர் அக்கிளியின் நன்றி மறவாத் தன்மையைக் கண்டு மகிழ்ந்தார். பின்பு அவர் அதை நோக்கி, "அருங்கிளியே! எல்லோரும் உன்னைப் போலவே இரக்கமும்

நன்றியறிதலும் உடையவர்களாய் இருக்க வேண்டும். உனக்கு வேண்டும் வரத்தைக் கேள்! தருகிறேன்" என்றார். அம்மொழியைக் கேட்ட கிளி பெரிதும் மனமகிழ்ந்து, "ஐயா! இம்மரத்தை முன்போலவே தழைக்கச் செய்யுங்கள். உங்களை நான் என்றைக்கும் மறவாமல் போற்றுவேன்", என்று சொல்லிற்று. அப்படியே சித்தர் அம்மரத்தை முன்போலவே தழைத்தோங்கச் செய்துவிட்டுத் தம் வழியே சென்றார். கிளியும் அதிலேயே தன் ஆயுட்காலம் முழுவதும் வாழ்ந்திருந்தது.

'நன்றி மறவேல்.'

பயிற்சி

1. சொல்வளம் :

பண்டை = பழைய; செம்மை + தமிழ் = செந்தமிழ் = தூய தமிழ்; சித்திகள் = திறமைகள்; ஆற்றங்கரை = ஆறு + கரை; இரை = உணவு; வரம் = வேண்டும் பொருள்; ஆயுள் + காலம் = ஆயுட்காலம்; நன்றி = ஒருவர் செய்த உதவி.

2. வினாக்கள் :

1. சித்தர்கள் என்பவர் யாவர்?
2. மரத்தின் கிளைகள் ஏன் பட்டுப்போயின?
3. கிளி எங்கே வசித்தது? ஏன் அங்கேயே வசித்தது?
4. முனிவரிடம் கிளி கேட்ட வரம் என்ன?

10. அன்னை காவிரி

(தானே கூறுவது)


'காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி—யென
மேவிய ஆறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு'.

என்று அமரகவி பாரதியார் பெருமிதத்துடன் பாடியுள்ள தமிழக ஆறுகளுள் முதன்மையாக விளங்கும் **காவிரியாறு** நான்.

தமிழ் நாட்டின் பெரும் பகுதியின் நிலவளத்துக்கும், நீர்வளத்துக்கும், செல்வத்துக்கும் காரணமாக உள்ள என்னைப் பற்றித் தெரிந்துகொள்ள நீங்கள் விரும்புவீர்கள். ஆதலால், என் வரலாற்றைக் கூறுகிறேன்; கேளுங்கள்.

மேற்கு மலைத்தொடரின் ஒரு பகுதியாகிய குடகு மலையில் **மெர்க்காரா** என்னும் ஊருக்கருகில் நான் உண்டாகின்றேன். இங்கு ஒரு நீரூற்று உள்ளது. அதிலிருந்து நான் வழிந்தோடிச் சிறு திருக்குளம் ஒன்றை நிரப்புகிறேன். பின்னர், போக்கு மடை மூலம் வெளிவந்து என் பயணத்தைத் தொடங்குகிறேன். இந்த இடத்தில் எனக்குத் **தலைக்காவிரி** என்று பெயர். திருக்

குளத்தின் ஒரு கரையில் எனக்கு ஒரு கோயில் அமைத்து, அதில் எனது உருவச் சிலை யொன்றை வைத்து, நாள்தோறும் பூசை நடத்திவருகிறார்கள்.



தலைக்காவிரி

நான் குடகு நாட்டிலிருந்து மலைகள் காடுகள் வழியாகப் பாய்ந்து, பல ஊர்களைக் கடந்து, மைசூர் இராச்சியத்தில் ஓடி, அங்குள்ள கழனிகளைச் செழிப்பிக்கிறேன். பின்பு, தமிழ் நாட்டில் புகுந்து முதலில் சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களிலும், பின்னர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களிலும் பாய்ந்து, பலவகை வளப்பங்களைப் பெருகச்செய்கிறேன்.

இறுதியில் நான் காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகில் வங்காளக்குடாக் கடலில் கலக்கிறேன்.

என்னிடம் கலக்கும் ஆறுகளும், பிரியும் ஆறுகளும் பலவாகும். **நொய்யல், பவானி, அமராவதி** முதலிய ஆறுகள் என்னுடன் சேருவதால் அவற்றின் நீர்ப்பெருக்கைப் பெற்று நான் பெரிய ஆருக விளங்குகிறேன். என்னிடமிருந்து பிரியும் கிளை ஆறுகளில் **கொள்ளிடம், விண்ணாறு, கல்லணைக் கால்வாய்** போன்றன முக்கியமானவை. திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் பத்துக் கல் தொலைவில் கொள்ளிடம் பிரிவதற்குமுன் எனக்கு **அகண்ட காவிரி** என்ற பெயர் வழங்குகிறது.

நான் கொண்டுவரும் நீர்ப்பெருக்கைப் பயன்படுத்துவதற்காக மக்கள் ஆங்காங்குப் பல ஏற்பாடுகள் செய்துள்ளனர். அவை பல அணைகளும் நீர்த்தேக்கங்களும் ஆகும். அணைகளுள் **மேலணை, கல்லணை, கீழணை** என்பன பழமையாக உள்ளன. நீர்த்தேக்கங்களுள் மைசூருக்கருகிலுள்ள **கிருஷ்ண ராஜ சாகரும்,** சேலம் மாவட்டத்திலுள்ள

மேட்டூர்த் தேக்கமும் புகழ் பெற்றவை யாகும்.

பயிர்களுக்கு நீர்ப்பாசனத்திற்காக நான் பெரிதும் பயன்படுவதுடன், மக்கள் எனது தண்ணீரைப் பருகவும், நீராடவும், மற்றும் பல வகைகளிலும் பயன்படுத்துகிறார்கள். இவை மட்டுமா? உங்கள் ஊர்களிலும் வீடுகளிலுமுள்ள மின்-விளக்குகள் எனது ஆற்றலைக் கொண்டே ஒளி தருகின்றன. இது உங்களுக்கு விந்தையாகத் தோன்றும். இது எவ்வாறு என்பதைப்பற்றி நீங்கள் மேல்வகுப்புக்களில் அறிவீர்கள்.

என் கரையோரங்களில் பல பெரிய ஊர்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் சீரங்கபட்டணம், சிவசமுத்திரம், மேட்டூர், திருச்சிராப்பள்ளி, சீரங்கம், திருக்குடந்தை, மாயூரம் முதலிய நகரங்கள் சிறப்பு வாய்ந்தன.

என்னைப்பற்றி முழு விவரங்கள் எடுத்துக் கூறினேன். ஆனால் உங்களுக்கு ஓர் ஐயம் எழலாம். என் பெயர் **காவேரியா** அல்லது **காவிரியா?** இவ்விருவகைகளிலும் என் பெயர் வழங்குகிறது. முன்னொரு காலத்தில் குடகு மலையில் **கவேரர்** என்னும்

முனிவர் வாழ்ந்துவந்தார். அவரது ஆச்சிரமத்தில் நான் தோன்றி ஓடிவந்தது பற்றி எனக்குக் காவேரி (=கவேரர் புதல்வி) என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர். எனது இருகரைகளிலும் விரிந்து சோலைகள் இருப்பதால் எனக்குக் காவிரி (கா = சோலை) என்ற தமிழ்ப் பெயர் வந்ததாகவும் சொல்லுவர்.

அன்னம் அளிப்பவள் காவேரி; நல்ல
ஆடை கொடுப்பவள் காவேரி;
இன்னும் மனிதர்க்கு வேண்டிய இன்பங்கள்
யாவையும் காவேரி யேதருவாள்.

யாருக்கு எப்படி ஆனாலும் இந்த
ஆற்றங் கரையில் வசிக்குமெங்கள்
ஏருக்கு நீர்தந்து யாருக்கும் சோறூட்டும்
எங்கள் குலதேய்வம் காவேரி.

என்று என்னைப்பற்றி நாமக்கல் கவிஞர் வியந்து கூறியுள்ளார். தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்களே! மேற்கூறிய பாடல்களை உங்களுக்கு நினைவுபடுத்தி என் வரலாற்றை முடித்துக்கொள்ளு கிறேன்.

பயிற்சி

1. சொல்வளம் :

தானே கூறுவது = சுயசரிதை; அமரகவி = கடவுட்தன்மை வாய்ந்த புலவர்; பெருமிதத்துடன் = பெருமையுடன், உள்ளக் களிப்புடன்; கழனிகள் = வயல்கள்; பட்டினம் = கடற்கரையிலுள்ள ஊர்; பட்டணம் = பெரிய நகரம்; அகண்ட = பிரிக்கப் படாத; நாமக்கல் கவிஞர் = உயர்திரு. வே. இராம லிங்கம் பிள்ளை.

2. வினக்கள் :

1. தமிழ் நாட்டில் பாயும் ஐந்து பெரிய ஆறுகள் எவை?

2. காவிரியின் வரலாற்றை நாம் ஏன் தெரிந்து கொள்ளவேண்டும்?

3. தலைக்காவிரி எங்கு உள்ளது? அகண்ட காவிரி எங்கு உள்ளது?

4. காவிரியின் துணை ஆறுகள் மூன்று சொல்; கிளை ஆறுகள் மூன்று சொல்.

5. காவிரியில் அமைக்கப்பட்டுள்ள அணைகள் எவை? நீர்த்தேக்கங்கள் எவை?

6. காவிரி, காவேரி — பெயர்க் காரணத்தை விளக்குக.

7. காவிரியாறு நமக்கு என்னென்ன தருவதாக நாமக்கல் கவிஞர் கூறுகிறார்?

11. நீர்வளம்

(நாட்டுப் பாடல்)

நல்லமழை பெய்ததனால்
நாடு செழித்தனவே
பூமி குளிர்ந்தனவே
பொய்கை நிரம்பினவே.

வயல்கள் மிகநிரம்பி
வாய்க்காலும் தானோடி
உலர்ந்த மரங்களெல்லாம்
உயிருண்டாய்த் தளிர்த்தனவே.

காடு செடிகளெல்லாம்
கனக்கவே தான்தழைக்கும்
செடிகள் மரங்களெல்லாம்
செழித்துத் தழைத்தனவே.

பூவா மரங்களெல்லாம்
பூத்துச் சொரிந்தனவே
காயா மரங்களெல்லாம்
காய்த்துச் சொரிந்தனவே.

செந்நெல் விளைந்தனவே
தேசம் செழித்தனவே
பயிர்கள் விளைந்தனவே
பலனைக் கொடுத்தனவே.

—அல்லியரசி மாலை

பயிற்சி

[முன்ஒரு காலத்தில் அல்லி என்ற ஓர் அரசி மதுரையில் ஆண்டுவந்தாள். அவளை அருச்சுனன் மணந்துகொண்ட கதையைக் கூறும் நூல் அல்லியரசி மாலை. இந்த நாட்டுப் பாடலைப் புகழேந்திப் புலவர் இயற்றியதாகக் கூறுவர்.]

1. சொல்வளம் :

நாடு = நாடுகள் ; பூமி=நிலங்கள் ; பொய்கை= குளங்கள் ; கனக்கவே = மிகுதியாகவே; பூவா = பூக்காத; காயா = காய்க்காத.

2. வினாக்கள் :

மழை பெய்ததனால்

1. உலர்ந்த மரங்கள் என்ன செய்தன ?
2. காயா மரங்கள் என்ன செய்தன ?
3. பயிர்கள் என்ன செய்தன ?

3. தெரிந்துகொள் :

அணை, வயல், காடு, மரம்,—இவை ஒவ்வொன்றும் ஒரு பொருளையே குறிக்கின்றன.


ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்ச்சொல் **ஒருமை எண்** எனப்படும்.

அணைகள், வயல்கள், காடுகள், மரங்கள்,—இவை ஒவ்வொன்றும் பல பொருள்களைக் குறிக்கின்றன. பல பொருள்களைக் குறிக்கும் பெயர்ச்சொல் **பன்மை எண்** எனப்படும்.

(*i*) இவைகளுக்கு ஒருமைச் சொற்கள் எழுது : விதைகள், களஞ்சியங்கள், பற்கள், பழங்கள், செடிகள், ஆட்கள்.

(*ii*) இவைகளுக்குப் பன்மைச் சொற்கள் எழுது : தானியம், ஊர், நாற்று, கல், மாணவன், புத்தகம், நான்.

12. வேலனின் வீரச் செயல்



வேலன் ஓர் உயர்நிலைப்பள்ளி மாணவன். அவன் சாரணர் பயிற்சி பெற்று, பிறர்க்கு உதவி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தான்.

வேலன் படித்த கல்விச்சாலை அவன் இல்லத்திலிருந்து இரண்டு கல் தொலைவில் இருந்தது. பள்ளிக்குப் போகும் வழியில் ஒரு இருப்புப்பாதை உண்டு. அந்த இருப்புப் பாதையின் குறுக்காக ஒரு காட்டாறு ஓடிற்று. புகைவண்டிகள் ஆற்றைக் கடக்க அதன்மீது ஒரு பாலம் இருந்தது.

ஒருநாள் வேலன் பள்ளிக்குச் செல்லும் போது இருப்புப்பாதையருகே வந்தான். முந்திய இரவு பெய்த பெருமழையினுல் தண்ணீர் காட்டாற்றில் கரை புரண்டு ஓடியது. அதனுல், பாலத்தின்மீது இருந்த இரும்புத் தண்டவாளங்களும், அவைகளைத் தாங்கும் மரக்கட்டைகளும் தடம்புரண்டு கிடந்தன. இருப்புப்பாதை பெரிதும் சேதமடைந்திருந்தது. இவற்றையெல்லாம் வேலன் கண்டான். சீர்கெட்டிருந்த பாதையைக் கவனிக்காமல் புகைவண்டித் தொடர் செல்லுமாகில் வண்டிகள் கவிழ்ந்து பிரயாணிகள் பலரும் உயிர் இழக்க நேரிடும் என்று அவன் உணர்ந்தான்; அவர்களைக் காப்பாற்ற எண்ணம் கொண்டான்.

அத்தருணம், பெரும் கூச்சலுடன் புகைவண்டித் தொடர் ஒன்று மிக்க விரைவாகத் தொலைவில் வருவதை வேலன் பார்த்தான். யாது செய்வது? தன்னுடைய புத்தகப் பையிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து, அதன் இரு செந்நிற அட்டைகளை விரித்துக்கொடிபோல் பிடித்துக்கொண்டான்; அஞ்சா நெஞ்சுடன் இருப்புப்பாதை அருகில் நின்று கொண்டு அதை விசிறினுன். புகைவண்டியை ஓட்டு

பவர், தொலைவில் இருந்தபடியே கொடி போலொன்று வீசப்படுவதைப் பார்க்க நேர்ந்தது. உடனே அவர் வண்டியை நிறுத்தினார். அவரும், வண்டிக்காவலரும், பிரயாணிகள் பலரும் வண்டியைவிட்டு இறங்கி வேலன் நின்ற இடத்துக்குச் சென்றார்கள். அவனை நோக்கி வண்டி ஓட்டுபவர் சினந்து, "ஏன் வண்டியை நிற்கச் செய்தாய்?" என்று கடிந்து பேசினார். அவன் வெள்ளத்தினால் இரும்புத் தண்டவாளங்கள் தடம்புரண்டு இருப்பதைச் சுட்டிக்காட்டினான். பலர் உயிர்களை இழக்க நேரிடும் பெருங்கேடு வேலனின் வீரச்செயலால் தவிர்க்கப்பட்டதை எல்லோரும் உணர்ந்தார்கள். அவர்கள் வேலனைப் புகழ்ந்து நன்றி செலுத்தினார்கள். இச்செய்தியை அரசியலார் அறிந்து வேலனுடைய வீரச்செயலுக்காகப் பரிசுகள் வழங்கினர். அவன் அன்றுமுதல் 'வீர வேலன்' என்று அழைக்கப்படலானான்.

பயிற்சி

1. வேலன் இருப்புப்பாதையில் என்ன கண்டான்?

2. வேலன் செய்த வீரச் செயல் யாது?

13. பாய் பின்னுதல்


நமக்கு உண்ண உணவு வேண்டும்; உடுக்க ஆடை வேண்டும்; இருக்க வீடு வேண்டும்; படுக்கப் பாய் வேண்டும். நாம் படுக்கும் பாய்களில் பல வகைகள் உண்டு. கோரைப்பாய், ஓலைப்பாய், ஈச்சம்பாய், தாழம்பாய், பிரப்பம்பாய் இவைகளைப் பார்த்தும், பயன்படுத்தியும் இருப்பீர்கள். இவைகளை எவ்வாறு செய்கிறார்கள், தெரியுமா?

நம்மில் பலர் படுக்கும் பாய் ஒருவிதக் கோரையினால் செய்யப்பட்டதாகும். வாய்க்கால் ஓரங்களிலும், குளத்து ஓரங்களிலும் கெட்டியான கோரை அடர்த்தியாக வளர்ந்திருக்கும். இந்தக் கோரையின் தண்டு கூடாக இராமல் பிரம்பைப் போலக் கெட்டியாக இருப்பதால் இதை எழுத்தாணிக் கோரை என்பார்கள். வாய்க்கால் ஓரங்களில் இது புதர்போல் மண்டி, மூன்று அல்லது நான்கு அடி உயரம் வளரும். இதன் நுனியில் மங்கலான பூ பூக்கும்.

நீண்டு வளர்ந்த பச்சைக் கோரைப் புற்களை அறுத்துவந்து, எழுத்தாணியால் நார்

போல் மெல்லியதாகக் கிழித்து வெயிலில் உலர்த்துவார்கள். அவை காய்ந்ததும் மஞ்சள் நிறமாக மாறும். அவைகளைச் சேர்த்துக் கற்றை கற்றையாகக் கட்டி வைப்பார்கள்.

துணி நெய்வதற்குச் சேணியர்கள் பயன்படுத்தும் தறியைப் பார்த்திருப்பீர்கள். கோரைப்பாய் பின்னப் பயன்படும் தறி அதைவிடச் சிறியது. இதை ஏறக் குறைய ஐந்து ரூபாய்ச் செலவில் தயார் செய்துகொள்ளலாம். பாயின் அளவுக்குத்



கோரைப் பாய் பின்னுதல்

தக்கபடி இந்தத் தறி நான்கு அடி அகலமும், ஏழு அடி நீளமும் இருக்கும். முறுக்கிய சணல் கயிறுகளைப் படத்தில்

காட்டியதுபோல் வரிசையாக நீளத்தில் ஒரு அங்குலம் விட்டுவிட்டு முதலில் கட்டுவார்கள். பிறகு உலர வைத்த கோரை நார்களைத் தண்ணீரில் நனைத்துச் சிறிது பதப் படுத்துவார்கள். நாரை ஒவ்வொன்றாக எடுத்துத் தறியிலுள்ள கயிறுகளுக்கு இடையில் மாறி மாறி மேலுங் கீழுமாகக் கோப்பார்கள். இப்படிக் கோப்பதற்குத் துணையாக ஒரு குச்சியைப் பயன்படுத்துவது உண்டு. வேண்டிய நீளம் நெய்த பிறகு, பாயைத் தறியை விட்டு எடுத்து, இரு நுனிகளிலும் கோரை நழுவாமலிருக்க முடிச்சுகள் போடுவார்கள். இரண்டு பக்க ஓரங்களிலும் கோரையைச் சிறிது மடித்து, பிரியாமலிருக்கச் சணல் கயிற்றால் தைத்து விடுவார்கள்.

கோரையை எவ்வளவு மெல்லியதாகக் கிழிக்கிறோமோ அவ்வளவு மென்மையாகப் பாய் இருக்கும். நாம் படுக்கும்போது அவ்விதப் பாய் உடலில் உறுத்தாமல் இருக்கும்.

கிழித்த கோரைகளைப் பல நிறச்சாயம் கலந்த தண்ணீரில் நனைத்து, அவைகளுக்கு வண்ணம் ஏற்றலாம். இவ்வித வண்ணக்

கோரைகளால் ஓவிய வடிவங்கள் அமையும் படி பாய் பின்னுவதுமுண்டு. வண்ணப் பாய்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

பனைமரங்கள் மிகுதியாகவுள்ள ஊர் களில் மட்டைகளை வெட்டி உலர வைத்து, ஓலைகளைத் தனித்தனியாகக் கிழித்து எடுப் பார்கள். இந்த ஓலைகளைக்கொண்டு ஓலைத் தடுக்குகளும் பாய்களும் பின்னி விற்ப துண்டு. பனையோலையால் பாய் பின்னுவது போலவே சிலர் ஈச்சம் ஓலைகளைக்கொண்டும் பாய்கள் பின்னி விற்பதைக் கண்டிருப்பீர் கள். இவை உறுத்துமாதலால் படுப்பதற்கு இப் பாய்களைப் பெரும்பாலும் பயன்படுத்து வதில்லை. தானியங்கள் போன்றனவற்றை வெயிலில் உலர்த்துவதற்குமட்டுமே ஈச்சம் பாய்களைப் பயன்படுத்துவார்கள்.

மலையாளத்திலுள்ள உப்பங்கழிகளின் ஓரமாகத் தாழை செழிப்பாக வளர்ந்திருக் கும். தாழை ஓலைகளை உலரவைத்துக் கிழித்துத் தாழம் பாய்கள் பின்னுகிறார்கள். அவை அங்கிருந்து தமிழ் நாட்டு ஊர்களுக் குக் கொண்டுவரப்பட்டு விற்பனையா கின்றன. தாழம் பாய் படுப்பதற்கு மென்மையாய் இருக்கும்.

இவ்வாறே, பிரம்புகள் கிடைக்குமிடங்களில் பிரப்பம் பாய்கள் பின்னுவதுண்டு. அவை விலை மிகுதி. அவைகளைத் திருமண வீடுகளில் விரிப்பாகப் பயன்படுத்துவதை நீங்கள் கண்டிருக்கலாம்.

நமது கிராமங்களில் பலர் பாய்கள் பின்னுவதை ஒரு குடிசைத் தொழிலாக நடத்திப் பொருள் ஈட்டி வாழ்கிறார்கள்.

பயிற்சி

1. சொல்வளம் :

உப்பங்கழி = கடலோடு கலக்கும் கால்வாய்; ஈட்டி = சேர்த்து; வண்ணம் = நிறம், அழகு.

2. வினாக்கள் :

1. நீ என்னென்ன வகைப் பாய்கள் பார்த்திருக்கிறாய் ?

2. எழுத்தாணிக் கோரை எங்கே வளரும் ? பாய் பின்னுவதற்கு அதை என்ன செய்வார்கள் ?

3. கோரை பிரியாமலிருக்கப் பாயின் ஓரங்களில் என்ன செய்கிறார்கள் ?

4. ஈச்சம் பாய்களை ஏன் படுப்பதற்குப் பயன்படுத்துவதில்லை ?

5. பிரப்பம் பாய்களின் பயன் என்ன ?

3. செயல் முறை :

பனையோலைப் பாய்களும் தடுக்குகளும் பின்னத் தெரிந்துகொள்.

4. இவைகளைக் கவனி :

ஒருமை	பன்மை
வந்தான்	வந்தார்கள்
பறந்தது	பறந்தன
சாய்ந்தது	சாய்ந்தன

பெயர்ச் சொற்களில் ஒருமை, பன்மை இருப்பது போல வினைச் சொற்களிலும் ஒருமை, பன்மையுண்டு.

தடித்த சொற்களைப் பன்மைச் சொற்களாக மாற்றி வாக்கியத்தை எழுது :

மாதிரி : **குடியானவன்** வந்தான்.

குடியானவர்கள் வந்தார்கள்.

நான் படிக்கிறேன்.

மாடு புல்லை மேய்ந்தது.

மயில் அழகாக ஆடுகிறது.

மரம் காற்றினால் விழுந்தது.

பையன் விளையாடுகிறான்.

அந்தப் **பெண்** கோலம் போடுகிறாள்.

14. இறைவன் மாண்பு

1. வண்ண மலரின் இதழ்ஆக்கி
வண்டை மயக்க நிறந்தீட்டி
வண்ண மலரில் மணமிட்டு
வடித்த செந்தேன் துளியிட்டு
விண்ணில் திரியும் பறவைகளின்
விரிந்த சிறகில் உயிரிட்டு
மண்ணை விண்ணைச் செய்தவரார் ?
மனத்திற் கேட்டா இறைவனடி.

2. விண்ணை முட்டும் குன்றுகளை
விரைந்து பாயும் ஆறுகளைக்
கண்ணைக் கவரும் பேரழகாய்க்
காலை மாலை ஒளிவீசி
மண்ணில் நாளும் உதித்தணைந்து
மனத்தைக் கவரும் கதிரவனை
எண்ண எண்ண என்உள்ளம்
என்றும் உருகும் இறைவனுக்கே.

—P R. இராசசூடாமணி

பயிற்சி

சொல்வளம் :

மாண்பு=சிறப்பு; வண்ணம்=அழகு; தீட்டி= எழுதி; இறைவன்=கடவுள்; கதிரவன்=சூரியன்; ஆக்கி=உண்டாக்கி; வண்ணம்=நிறமுள்ள; விண்ணில்=வானில்; மண்ணை=பூவுலகை; விண்ணை=வானுலகாய்.

15. செய்தித்தாள்

பிள்ளைகளே! நாள்தோறும் உங்கள் வீட்டில் செய்தித்தாள் தருவிக்கிறீர்களா? உலகில் பல இடங்களில் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகளைப்பற்றிய செய்திகளை வெளியிடும் தாள் செய்தித்தாள் எனப்படும். பாடம் படிக்கும் நேரம் போக, ஓய்வு நேரங்களில் நீங்கள் செய்தித் தாள்களைப் படிக்கப் பழகினால் உங்கள் அறிவு வளர்ச்சிபெறும். கீழே காணும் செய்திகளை மனத்திற்குள் படித்து அறியுங்கள்.

செய்தி—I

காவிரியில் பெருவெள்ளம்

கொடுமுடியில் பயிர்களுக்கு மிகுந்த சேதம்

கொடுமுடி, ஆகஸ்டு 18உ

இன்று இங்குக் காவிரியில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. இதனால் கரையோரங்களிலுள்ள பல வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. உயரிய மதில் சுவர்களும், பெரிய மரங்களும் விழுந்து விட்டன. காவிரியின் கரை ஓரங்களிலுள்ள நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்களுக்கு மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. இன்று பள்ளிகள் அனைத்திற்கும் விடுமுறை விடப்பட்டது. புதிதாகக் கட்டப்பட்ட மரப்பாலம் ஒன்று வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டது. ஆடு மாடுகள் பல வெள்ளத்தில் இறந்து மிதந்து செல்லுகின்றன. பொது மக்களுக்குக் கிராம அதிகாரிகள் பெரு வெள்ளத்தைப்பற்றி அடிக்கடி எச்சரிக்கை தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ந. கி.

செய்தி—II

பாரதியார் நினைவு நாள்



நாமக்கல், செப். 11உ

இவ்வூர் உயர்நிலைப் பள்ளி மாணவர் மன்றத்தின் ஆதரவில் பாரதி நினைவு நாள் விழா கொண்டாடப்பட்டது. காலையில் அமரகவி சுப்பிரமணிய பாரதியாரின் உருவப் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அத்தருணம் பள்ளிச் சிறுவர்கள் பாரதியாரின் பாடல்களைப் பாடிக்கொண்டு உடன் சென்றனர்.

பகல் 1 மணிக்கு நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு உணவு அளிக்கப்பட்டது.

மாலையில் பொதுக் கூட்டம் ஒன்று, கிராம நல அதிகாரி திரு. அண்ணாமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பாரதி பாடல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குத் திருமதி கண்ணம்மாள் பரிசுகள் வழங்கினார். புலவர் திரு. குமாரசாமி அவர்கள் பாரதியாரின் வாழ்க்கை வரலாறுபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி கூறப்பட்டது. நாட்டு வாழ்த்துப் பாடிக் கூட்டம் கலைந்தது.

ந. நி.

பயிற்சி

1. சொல்வளம்:

மன்றம் = கழகம்.

ந. நி. — நமது நிருபர் என்பதன் சுருக்கு எழுத்துக்கள்.

2. வினாக்கள் :

1. வெள்ளத்தால் கொடுமுடியில் விளைந்த சேதம் என்ன ?

2. பாரதியாரின் நினைவு நாள் விழாவை நாமக்கல் உயர்நிலைப்பள்ளியில் எவ்வாறு கொண்டாடினார்கள் ?

3. செயல்முறை :

ஒவ்வொரு நாளும் செய்தித்தாள் ஒன்றைப் படித்து முக்கியச் செய்திகளைக் கத்தரித்து, தனிக் குறிப்புப் புத்தகம் ஒன்றில் ஒட்டிவை.

4. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள் இவைகளை எடுத்து எழுது:

வெள்ளம் ஓடுகிறது.

நெல், கரும்பு, வாழை முதலிய பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

ஆடுகள் வெள்ளத்தில் இறந்தன.

குமாரசாமி சொற்பொழிவு நிகழ்த்தினர்.

16. தன் கையே தனக்கு உதவி

ஒரு வயலில் வளர்ந்திருந்த நெற்பயிரின் இடையில் வானம்பாடி ஒன்று தன் குஞ்சு களுடன் கூடு கட்டி அதில் வாழ்ந்து கொண்டிருந்தது. பயிர் அடர்த்தியாக இருந்ததால் அந்தப் பறவையும் குஞ்சுகளும் அங்கு வாழ்வது எவருக்கும் புலப்படவில்லை. நாள்தோறும் காலையில் தாய்ப் பறவை தன் குஞ்சுகளை விட்டுவிட்டு வானத்தில் உயரப் பறந்து இரை தேடித் தானும் தின்பதுடன் குஞ்சுகளுக்கும் கொண்டு வந்து கொடுக்கும்.

இவ்வாறு இருக்கையில் அறுவடைக் காலம் வந்தது. பயிர்செய்த குடியானவன் தன் மகனுடன் ஒரு நாள் வயற்புறம் வந்து பார்த்தான். கதிர்கள் முற்றித் தாள்கள் சாய்ந்திருந்தன. அவன் தன் புதல்வனைப் பார்த்து, “இனி அறுவடை செய்யலாம். நாளைக்கு அயலார்களை அழைத்துவந்து கதிர்களை அறுத்து நெல்லைச் சேகரிப்போம். இன்று வீடு திரும்புவோம்” என்று உரைத்தான்.

மாலையில் தாய்ப்பறவை கூட்டுக்குத் திரும்பியதும் குடியானவனும் அவன்

மகனும் பேசிக்கொண்டிருந்த விவரத்தைக் குஞ்சுகள் தாய்க்குத் தெரிவித்து, "நாம்



குடியானவனும் மகனும் வயலைப் பார்வையிடுதல்

இனி இங்கு இருக்கக்கூடாது; வெளியேற வேண்டும்" என்று கூறின. அதற்குத் தாய், "இப்பொழுது தீங்கு ஒன்றும் நேரிடாது; பிறகு பார்த்துக்கொள்வோம்" என்று மறுமொழி பகர்ந்தது.

குடியானவன் அறுவடையில் உதவி செய்ய அயலார்களை அழைத்தான். அவர்கள்

வேறு அலுவல்கள் காரணமாகப் பின்னொரு நாள்தான் வரக்கூடுமென்று சொல்லிக் காலதாமதம் செய்தார்கள். இவ்வாறு ஒரு வாரம் சென்றது. அவர்கள் உதவிக்கு வருவதாகத் தோன்றவில்லை. ஆதலால் தன் மைந்தனுடன் அக் குடியானவன் பிறகு ஒருநாள் வயற்புறத்துக்கு மறுபடியும் வந்து பார்த்தான். கதிர்கள் நன்கு முற்றியிருந்தன. அவன், "உடனே அறுக்காவிடில் தானிய மணிகள் உதிர்ந்து சேதம் உண்டாகும். ஆதலால் '**தன் கையே தனக்கு உதவி**' என்றபடி நாமிருவருமே அரிவாளுடன் நாளைக் காலை இவ்விடம் வந்து அறுவடை செய்வோம்" என்று கூறினான். இருவரும் இல்லம் திரும்பினார்கள்.

அன்று மாலையிலும் வழக்கம்போல் தாய்ப் பறவை கூட்டிற்குத் திரும்பியது. காலையில் குடியானவன் பேசிக்கொண்டிருந்ததைத் தாயிடம் குஞ்சுகள் தெரிவித்தன. அப்போது வானம்பாடி, "என் அருமைக் குஞ்சுகளே! இனி ஒரு நொடியும் இந்த வயலில் தங்குதல் கூடாது. குடியானவன் பிறர் உதவியை நாடி நம்பியிருந்த வரையில் எதுவும் நடவாது என்று எனக்குத் தெரியும். அதனால்தான் இதுவரை இங்குத்

தங்கினேம். ஆனால் இப்போது அவன் பிறரை நம்பாமல் தானே அறுவடையைத் துவக்குவதாகத் தெரிவித்துவிட்டான். அவன் சொல்லிய வண்ணம் நாளைக்காலையிலேயே அறுவடை தொடங்கிவிடுவான். ஆதலால் நாம் இன்றைக்கே இவ்விடம் விட்டகலுவோம்" என்று சொல்லித் தன் குஞ்சுகளுடன் வேருேர் இடத்துக்குப் பறந்து சென்றது. மறுநாட்காலையில் குடியானவனும் தான் சொன்னபடியே மகனுடன் வந்து நெற்பயிர்களை அறுவடை செய்தான்.

பயிற்சி

1. சொல்வளம் :

வயல்+புறம் = வயற்புறம்; மறுநாள்+காலை = மறுநாட்காலை; நாம் + இருவர் = நாமிருவர்; பகர்ந்தது = சொல்லியது; மைந்தன் = புதல்வன் = மகன்.

2. வினக்கள் :

1. வானம்பாடி எங்கே கூடு கட்டியிருந்தது? ஏன் அங்குக் கட்டியிருந்தது?

2. குடியானவனும் அவன் மகனும் முதல் நாள் பேசிக்கொண்டிருந்ததைக் குஞ்சுகள் தெரிவித்தபொழுது தாய் என்ன சொல்லியது?

3. தகப்பனும் மகனும் இரண்டாம் முறை வந்தபொழுது என்ன பேசிக்கொண்டார்கள்?

4. வானம்பாடியும் குஞ்சுகளும் ஏன் வயலை விட்டு அகன்றன?

17. கடிதங்கள்

1. இளையோருக்குப் பெரியோர் எழுதும் கடிதம்

12, தெற்கு மாசி வீதி,
தென்காசி,
24-7-1958.

அன்புள்ள காந்தி,

வாழ்க! வளம் பெறுக.

உன் கடிதம் கிடைத்தது. பள்ளிப் போட்டிகளில் உனக்குப் பரிசுகள் கிடைத்தன என்று அறிய உன் மாமியும் நானும் பெருமகிழ்ச்சி அடைந்தோம்.

உனக்கு ஒன்று கூற விரும்புகிறேன். இக்காலத்தில் படித்த பெண்களில் சிலரைப்போல் ஆடம்பரமாய் இராமல், நீ நம் நாட்டுப் பண்பாடுகளில் சிறந்து விளங்குவாய் என்று நம்புகிறேன். உனக்கு வயது வந்ததும் நீ குடும்ப வேலைகளில் ஈடுபடவேண்டியிருக்கும். சமையல் செய்தல், தையல் வேலை, கோலம் போடுதல் போன்ற தொழில்களில் நீ திறமைபெற்று விளங்கவேண்டும். எல்லோரிடமும் அன்புடனும் மரியாதையுடனும் பழகு; இன்சொல் பேசு; தன்னலமில்லாமல் நடந்துகொள்; ஏழைகளிடமும் வேலைக்காரர்களிடமும் அன்பாயிரு; அவர்களுக்கு உன்னாலியன்ற உதவிகளைச் செய்.

திருக்குற்றாலத்தில் சாரல் மழை தொடங்கிவிட்டது. அருவியில் தண்ணீர் பெருகி விழுகிறது. ஆதலால் விடுமுறை நாட்களில் நீ ஒருமுறை இவ்விடம் வந்து சேர். எங்கள் வீட்டில் ரேடியோ ஒன்று வாங்கிவைத்

திருக்கிறோம் ; பாட்டுக்களும், கதைகளும், செய்திகளும் கேட்டு மகிழலாம்.

உன் மாமியும் குழந்தை உலகம்மையும் உன் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். உன் வருகையைப் பற்றி முன்கூட்டியே கடிதம் எழுது.

இங்ஙனம்,
உன் அன்புள்ள மாமன்,
கு. நெல்லையப்பன்

முகவரி :

செல்வி காந்திமதி 38, கீழ வீதி திருச்செந்தூர்

2. பெரியோருக்கு இளையோர் எழுதும் கடிதம்

38, கீழ வீதி,
திருச்செந்தூர்,
27-7-1958.

அன்பு மிகுந்த மாமா அவர்களுக்கு,

வணக்கம் பல.

இங்கு யாவரும் நலம். அங்கு எல்லோருடைய நலத்தையும் அறிய ஆவல்.

தங்களுடைய அன்புகனிந்த கடிதத்தைப் படித்துப் பெருமகிழ்ச்சி யடைந்தேன். அதில் தாங்கள் கூறியுள்ள நல்லுரைகளைப் பெரிதும் போற்றுகிறேன் ; அவ் வண்ணமே நடக்க முயலுகிறேன்.

திருக்குற்ருலத்தின் இயற்கைக் காட்சிகளைக் காண வும், அருவியில் நீராடவும் தாங்கள் என்னை அழைத் திருப்பதை அன்னையிடமும் தந்தையிடமும் தெரிவித் தேன். வருகிற சனி ஞாயிறில் உற்ற துணையுடன் என்னைத் தென்காசிக்கு அனுப்ப அவர்கள் இசைந் துள்ளார்கள்.

மாமிக்கும் குழந்தை உலகுக்கும் என் அன்பைச் சொல்லுங்கள். பிற நேரில்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மருகி,
காந்திமதி

முகவரி :

உயர்திரு. கு. நெல்லையப்பர் அவர்கள் 12, தெற்கு மாசி வீதி தென்காசி

பயிற்சி

கடிதம் எழுதுவதில், (அ) எழுதுபவரின் முகவரி, (ஆ) தேதி, (இ) தொடக்கம், (ஈ) உள்ளுறை, (உ) முடிவு, (ஊ) கையெழுத்து, (எ) போய்ச்சேரவேண்டிய முகவரி,—இவை களை எங்கெங்கே எழுதவேண்டுமென்று தெரிந்துகொள்.

2. முந்தின கடிதத்தின் முறைக்கும் இந்தக் கடிதத்தின் முறைக்கும் தொடக்கத்திலும், முடிவிலும், முகவரியிலும் உள்ள வேறுபாட்டை அறிக.

3. **வினக்கள் :**

1. காந்திமதிக்கு மாமன் எழுதியனுப்பிய நல்லுரைகள் யாவை ?

2. அவளை ஏன் தென்காசிக்கு வருமாறு அழைத்தார் ?

3. காந்திமதி தன் தாய்தந்தையரிடம் யாது தெரிவித்தாள்? அவர்கள் என்ன கூறினார்கள் ?

18. சிற்றூர்

சின்னப் பள்ளி ஒன்றுண்டு
பெரிய கோயில் பலஉண்டு
நன்செய் புன்செய் நாற்புறமும்
நடவும் உழவும் இசைபாடும்
தென்னையும் பனையும் பலமரமும்
செடியும் கொடியும் அழகுதரும்
நன்னீர் வாய்க்கால் ஏரிகுளம்
நலம் கொழிப்பது சிற்றூராம்.

மச்சு வீடு ஏழெட்டு
மாடி வீடு நாலைந்து
குச்சு வீட்டு வாயில்கள்
குனிந்து போகப் பலவுண்டு
தச்சுப் பட்டறை ஒன்றுண்டு
தட்டார் பட்டறை ஒன்றுண்டு
அச்சுத் திரட்டும் கருமாரின்
பட்டறை உண்டு சிற்றூரில்.

கம்பும் தினையும் கேழ்வரகும்
கட்டித் தயிரும் சம்பாவும்
கொம்பிற் பழுத்த கொய்யா மா
குலையிற் பழுத்த வாழையுடன்
வேம்பும் யானைத் தலைபோல
வேரிற் பழுத்த நல்லபலா
நம்பிப் பெறலாம் சிற்றூரில்
நாயும் குதிரை போலிருக்கும்.

—பாரதிதாசன்

பயிற்சி

1. சொல்வளம்:

சிற்றூர் = சிறிய ஊர், கிராமம்; நன்னீர் = நல்ல நீர்; குச்சுவீடு=குடிசை.

2. வினாக்கள்:

1. சிற்றூரில் எவ்வகை வீடுகள் இருக்கும்?

2. சிற்றூரில் என்னென்ன பழங்கள் கிடைக்கும்?

3. கோடிட்ட இடங்களை நிரப்பு:

நடவும் உழவும் ——.

தச்சுப் —— ஒன்றுண்டு.

—— பழுத்த கொய்யா மா.

வேரிற் பழுத்த ——.

---

19. சிறுவனும் பூனையும்—I

பல ஆண்டுகளுக்குமுன் இங்கிலாந்து நாட்டிலுள்ள ஒரு சிற்றூரில் **டிக் விட்டிங்டன்** என்னும் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் இளமையிலேயே தன் தாய் தந்தையர்களை இழந்துவிட்டதால், கூலி வேலை செய்து வாழும் தனது அத்தையின் வீட்டில் வதிந்துவந்தான்.

ஒரு நாள் டிக், வழிப்போக்கர்கள் சிலர் இங்கிலாந்தின் தலைநகராகிய லண்டன் நகரத்தைப்பற்றிப் பெருமையாகப் பேசியதைக் கேட்டான். அவர்கள், ‘லண்டன் நகரம்

எவ்வளவு அழகானது! அதன் வீதிகளெல்லாம் பொன்மயமானவை! அங்குள்ளவர்கள் எல்லோரும் மாடமாளிகைகளில் வாழும் பெரும் செல்வர்கள்!' என்று சொன்னார்கள். இதைக் கேட்ட டிக், மிகவும் வியப்படைந்து, தானும் லண்டன் நகரம் சென்று செல்வனாகி இன்பமாய் வாழவேண்டுமென்று ஆவல் கொண்டான்.

உடனே டிக் லண்டனுக்குப் புறப்பட்டான்; கையில் பணமில்லாததால் ஒரு போக்குவண்டியிலேறி லண்டன் நகரத்தை அடைந்தான். டிக் கேள்விப்பட்டதுபோல லண்டன் நகரம் காணப்படவில்லை. வீதிகளெல்லாம் பெரும்பாலும் சரளைக் கற்சாலைகளாகவே இருந்தன. மாட மாளிகைகள் இருந்தனவென்றாலும் சிறு வீடுகளும் காணப்பட்டன; செல்வர்களேயன்றி எளியவர்களும் நடமாடிக்கொண்டிருந்தனர். உணவு விடுதிகள் பல இருந்தன. ஆனால், பணம் கொடுப்போருக்குத்தான் உணவு கிடைத்தது. தங்குவதற்கும் அங்கு இடமில்லை.

டிக் தனக்கு ஏதேனும் ஒரு வேலை கிடைக்குமா என்று லண்டன் தெருக்களில் பகல் முழுவதும் அலைந்து திரிந்தான்; எங்

கும் வேலை கிடைக்காமையால் சோர்வடைந்தான். கையில் பணமில்லை; உணவுக்கு வழியில்லை; ஏழைச் சிறுவனுக்கு எவர் உதவி செய்வார்கள்? இரவு வந்தது. நடந்த களைப்பினாலும், பசித் துன்பத்தினாலும் வருந்திய டிக், முடிவில் ஒரு மாளிகையின் வாயிற்படியில் வந்து படுத்துக்கொண்டான்.

அம் மாளிகையின் உரிமையாளர் பெரிய கப்பல் வியாபாரி. வெளியிற் சென்று திரும்பிய அவர், வாயிற்படி அருகில் படுத்திருந்த சிறுவனைக் குனிந்து பார்த்தார். அவர் அவனை எழுப்பி உள்ளே அழைத்துச் சென்றார்; உடனே தமது ஏவலரையழைத்து அவனுக்கு உணவளிக்கச் செய்தார். சிறுவன் உண்டு பசியாறியதும் அவர் அவனது வரலாற்றைக் கேட்டார். டிக் தன் எளிய நிலையையும், தான் லண்டன் நகரத்திற்கு வந்த காரணத்தையும் தெரிவித்தான். கப்பல் வியாபாரி சிறுவன் மீது இரக்கங்கொண்டு அவனைத் தமது மாளிகையிலேயே வேலைக்காரிக்கு உதவியாய் இருக்கும்படி சொன்னார். டிக் மகிழ்ச்சியடைந்து அவருக்கு நன்றி செலுத்தினான்.

கப்பல் வியாபாரியின் மாளிகையில் டிக் தனக்கிட்ட பணிகளைச் சுறுசுறுப்பாகவும்

திறமையாகவும் செய்துவரலானன். அவனுடைய பணிவையும் நற்பண்புகளையும் கண்ட மாளிகைத் தலைவரும், அவரது செல்வ மகள் லூஸி என்பவளும் அவனிடம் அன்பாய் இருந்துவந்தனர். இதைக் கண்டு பொறுமைகொண்ட வேலைக்காரி அவனைக் கொடுமையாக நடத்திவந்தாள்.

டிக் தங்கியிருந்த அறையில் எலிகள் மிகுதியாய் இருந்தன. அதனால், இரவில் நல்ல தூக்கம் இல்லாமல் டிக் துன்பப் பட்டான். ஒரு நாள் டிக் லூஸியிடம் எலியின் தொந்தரவைப்பற்றித் தெரிவித்தான். அச்சிறுமி அன்புடன் சிறிது பொருள் கொடுத்து ஒரு பூனை வாங்கி வளர்க்கச் சொன்னாள். டிக் அவ்வாறே செய்ததால் எலிகளின் தொந்தரவு நீங்கியது.

வீட்டுத் தலைவர் வெளிநாடுகளுக்கு வாணிகம் செய்யப் புறப்பட்டார். அவர் பல பொருள்களைக் க்கப்பலில் ஏற்றிச் சென்று அயல் நாடுகளில் விற்றுவிட்டு, அங்கிருந்து வேறு பொருள்களை ஏற்றி வந்து தமது ஊரில் விற்பது வழக்கம். அவ் வழக்கப் படி இப்பொழுதும் புறப்பட்டபொழுது, தம் வீட்டில் உள்ளோர் விற்பதற்குரிய பொருள் யாதேனும் கொடுத்தால் அதை விற்று

வருவதாகத் தெரிவித்தார். பலர் வெவ்வேறு பொருள்களைக் கொடுத்தனர்; டிக் மட்டும் சும்மா இருந்தான். இதைக் கண்ட லூஸி டிக்கினுடைய பூனையைக் கொண்டுவந்து தன் தந்தையிடம் கொடுத்து விற்று வருமாறு சொன்னாள். அவர் அதை வாங்கிக் கொண்டு பயணப்பட்டார். டிக் மீண்டும் எலிகளின் தொந்தரவுக்கு உள்ளானான். வேலைக்காரியின் கொடுமையும் மிகுதியாயிற்று.

பயிற்சி

1. சொல்வளம் :

மாடம்=மண்டபம்; மாளிகை=மெத்தைவீடு; கல் + சாலை = கற்சாலை; ஏவலர் = பணியாளர், வேலைக்காரர் ; வாணிகம் = வியாபாரம்.

2. வினாக்கள் :

1. சிறுவனின் பெயர் என்ன? அவன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்?

2. அவன் லண்டன் நகரத்தைப் பற்றி என்ன கேள்விப்பட்டான்?

3. லண்டன் நகரத்துக்கு டிக் எவ்வாறு சென்றான்? அது எவ்வாறு காணப்பட்டது?

4. அவன் களைப்பினால் படுத்திருந்த வீடு யாருடையது? அவர் அவனுக்கு என்ன உதவி செய்தார்?

5. லூஸி யார்? அவள் டிக்குக்கு என்ன உதவி செய்தாள்?

6. கப்பலில் கொண்டுபோக லூஸி எதைத் தந்தையிடம் கொடுத்தாள்?

20. சிறுவனும் பூனையும்—II

வணிகரின் கப்பல் கடலில் செல்லும் பொழுது பெரிய புயல் வீசியதால் திசை மாறிப்போய் ஒரு புதிய தீவை யடைந்தது. இதையறிந்த அத்தீவின் அரசன் கப்பலில் வந்தவர்களை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு விருந்தளித்தான். விருந்தில் சுவை நிறைந்த பலவகைத் தின்பண்டங்கள் பரிமாறப்பட்டன. அப்பொழுது பெரிய எலிகள் கூட்டங்கூட்டமாய் வந்து அருகில் அமர்ந்திருப்போரைக் கண்டு சிறிதும் அஞ்சாமல் தின்பண்டங்களையெல்லாம் தின்றன. இதைக்கண்டு திகைத்த விருந்தினர், 'இந்த எலிகளைக் கொன்று ஒழிக்க முடியவில்லையா?' என்று அரசனை நோக்கிக் கேட்டனர். அரசன் வருத்தத்துடன், 'இத் தீவில் எலிகளின் தொல்லை மிகுதி. இவற்றை ஒழிக்க ஒரு வழியும் தெரியவில்லை. யாரேனும் வழி செய்தால் அவருக்கு நிரம்பப் பொன் கொடுப்பேன்' என்று தெரிவித்தான்.

இதைக் கேட்ட வணிகர் கப்பலிலிருந்த பூனையைக் கொண்டுவரச் செய்தார்.

அப்பொழுது மீண்டும் தின்பண்டங்கள் பரிமாறப்பட்டிருந்தன. அவற்றைத் தின்ன வந்த எலிகள் பூனையைக் கண்டதும் வளைக்குள் ஓடி ஒளியத் தலைப்பட்டன. பூனை சில



பூனைக்கு அஞ்சி எலிகள் ஓடுதல்

எலிகளைப் பிடித்துக் கொன்றது. பிறகு, எலிகளின் தொல்லையின்றி யாவரும் விருந்து உண்டனர்.

பூனையின் செயலைக் கண்டு அத்தீவிலுள்ளோர் வியப்படைந்தனர். ஏனென்றால்,

அவர்கள் அதுவரையில் பூனையைப் பார்த்ததேயில்லை. விருந்து முடிந்ததும் அரசன் தான் கூறியபடி வணிகரிடம் நிறையப் பொன் கொடுத்து நன்றியும் கூறினான். பிறகு, விருந்தினர் யாவரும் கப்பலேறினர். வணிகர் தம் பொருள்களை யெல்லாம் விற்றுவிட்டு லண்டனுக்குத் திரும்பினார்.

வணிகர் தம் மாளிகையை யடைந்ததும் டிக் என்னும் சிறுவனை யழைத்து, தீவில் நிகழ்ந்தவற்றைச் சொல்லி, பூனையால் கிடைத்த பொன்னை அவனிடம் கொடுத்தார். சிறுவன் பொன்னைப் பெற்றுக் கொள்ள மறுத்தான்; ஆயினும், வணிகர் அன்புடன் வற்புறுத்திக் கொடுக்கவே பணிவுடன் ஏற்றுக்கொண்டான்.

பிறகு வணிகர் சிறுவனுடைய பொன்னைக் கொண்டு பெரிய மாளிகையையும், நன்செய், புன்செய் நிலங்களையும் அவனுக்கு வாங்கிக்கொடுத்தார். தம் ஒரே மகளான லூஸியையும் அவனுக்கே மணம் செய்து கொடுத்தார். பின்னர் யாவரும் ஒரே குடும்பத்தினராய் இன்பமாக வாழ்ந்து வந்தனர்.

டிக் தனது நற்பண்பினுல் வணிகரின் ஆதரவையும், அவர் மகள் லூஸியின் அன்பையும் பெற்றுப் பெருஞ்செல்வனுனுன். டிக், தன்னைக் கொடுமையாக நடத்திய வேலைக்காரியை வெறுக்காமல் அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தானென்ருல், அவனுடைய பெருந்தன்மையை என்னென்று கூறுவது! இத்தகைய டிக் சிறிது காலத்தில் லண்டன் நகராட்சி மன்றத் தலைவனுய் விளங்கினுன்.

பயிற்சி

1. வினுக்கள் :

1. வணிகரின் கப்பல் எவ்விடத்தை அடைந்தது?

2. புதிய தீவில் நடைபெற்ற முதல் விருந்தில் தின்பண்டங்களுக்கு என்ன நேர்ந்தது ?

3. அத்தீவின் அரசன் யாது தெரிவித்தான் ?

4. வணிகர் பூனையைக் கொண்டுவந்து விட்டதும் எலிகள் என்ன செய்தன ?

5. பூனைக்கு ஈடாக அரசன் என்ன கொடுத்தான்?

6. வணிகர் ஊர் திரும்பியதும் சிறுவனுக்காக என்ன என்ன செய்தார் ?

7. இறுதியில் டிக் என்ன பதவி ஏற்ருன் ?

21. காகமும் பாம்பும்



கோடுறு சினையிற் காகம்
    கூடுவைத்து அநேக காலம்
பேடோடு கூடி வாழும்
    பெருமரப் பொந்தில் வந்தே,
ஆடிய கரும்பாம்பு ஒன்றுஅங்கு
    அதுபெறும் முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போக
    நலிந்துஉளம் மெலிந்து வாடி.

தன் னுயிர்ப் பாங்க னுன
    சம்புகன் அருகுபோய், "இங்கு
என்ன செய்குவன்நான்" என்ன,
    "இதைக்கோலல் அரிதோ ? நீபோய்

மன்னவன் தேவி ஆடும்
    மஞ்சனச் சாலை புக்குப்
பொன்அணி கொண்டு வந்து
    பொடுக பொந்தில்'' என்ன. 2

காகம் அப்படியே செய்யக்
    காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
    ஈர்ந்தனர். ஈரும் போதில்
நாகம் அங்கிருந்து சீற,
    நறுக்கினர் இரு துண்டாக.
ஆகையால் உபாயம் தன்னால்
    ஆகாத தில்லை கண்டீர். 3

—பஞ்ச தந்திரம்

பயிற்சி

சொல்வளம்:

கோடுறு = வளைந்த; சினையில் = மரக்கிளையில்; பேடொடு = பெண் காக்கையுடன்; பாங்கன் = தோழன்; சம்புகன் = நரி; மஞ்சனச் சாலை = நீராடும் அறை; காவலன் = அரசன்; ஈர்ந்தனர் = பிளந்தனர்; நலிந்து = மனம் வாடி; கொல்லல் = கொல்லுதல்; செய்குவன் = செய்வேன்.

22. கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

நம் தமிழ் நாட்டில் இக்காலத்தில் கவிஞர்கள் பலர் தோன்றி இனிய பாடல்கள் இயற்றியுள்ளனர். அவர்களுடைய பாடல்கள் புதிய முறையிலும், எளிய தமிழ் நடையிலும் அமைந்து, தமிழ் மக்களுக்குப் புதிய உணர்ச்சி ஊட்டுகின்றன. இத்தகைய அரிய பாடல்கள் இயற்றியுள்ள புலவர்களில் **கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை** ஒருவராவர். இவர் நாமக்கல் என்னும் ஊரில் பல ஆண்டுகளாக வதிந்துவந்ததால், இவரை **நாமக்கல் கவிஞர்** என்றே அழைப்பதுண்டு. சென்னை அரசியலார் இவரது கவிச் சிறப்பினைப் பாராட்டி, இவரை அரசவைக் கவிஞராக நியமித்தனர்.

கவிஞர் இராமலிங்கம் பிள்ளை 1888-ம் ஆண்டில், சேலம் மாவட்டத்தில் **மோகனூரில்** பிறந்தவர். இவரது தந்தையார் பெயர் **வேங்கடராம பிள்ளை.** இராமலிங்கம் பிள்ளை இளமையில் ஓர் உயர்நிலைப் பள்ளியில் படித்துத் தேர்ச்சிபெற்றார்; பின்பு திருச்சிராப்பள்ளியிலுள்ள கல்லூரி ஒன்றில் சேர்ந்து, ஈராண்டுகள் கல்வி பயின்றார். இடையில் கல்லூரிப் படிப்பை இவர் கைவிட

நேர்ந்தது. கவிஞர் இளமை முதற் கொண்டே கவிகள் பாடுவதிலும் ஓவியம் வரைவதிலும் ஊக்கம் செலுத்திவந்தார்.

நாமக்கல் கவிஞர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் **பிரார்த்தனே, என் கதை, தமிழன் இதயம், காந்தியஞ்சலி** முதலியன சிறப்பு வாய்ந்தனவாகும். பிரார்த்தனே நூலிலுள்ள பாடல்கள் சிறுவர்களுக் கென்றே பாடப்பட்டன என்னலாம்.

காந்தியடிகளைத் தமக்கு ஒரு வழி காட்டியாகக் கொண்டு அவரது கொள்கை களைக் கவிஞர் தமது வாழ்க்கையில் கடைப் பிடிக்கலானார். பின்னர் இவர் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து, நம் நாட்டிற்குத் தொண்டு ஆற்றத் தொடங்கினார். இவர் ஆழ்ந்த கடவுட் பற்று உள்ளவர்; எளிய மக்களிடம் இரக்கங் காட்டுபவர்; நாட்டுக்குத் தொண்டு புரிவதில் ஆர்வங் கொண்டவர். கவிஞரது பாடல்கள் நாட்டுப் பற்று ததும்புவன ஆகும். நம் கவிஞர் வளம் பல பெற்றுப் பல்லாண்டு வாழ்வாராக!

பயிற்சி

1. சொல்வளம்:

கவிஞர் = கவிபாடுபவர், புலவர்; வதிந்து = வசித்து; ஓவியம் = சித்திரம்; கடவுள் + பற்று = கடவுட் பற்று.

2. வினக்கள் :

1. கவிஞர் இராமலிங்கம் பிள்ளை ஏன் நாமக்கல் கவிஞர் என்று அழைக்கப்படுகிறார் ?

2. சென்னை அரசியலார் இவரை ஏன் அரசவைக் கவிஞராக நியமித்தார் ?

3. கவிஞர் இளமையிலிருந்தே எவைகளில் ஊக்கம் செலுத்திவந்தார் ?

4. கவிஞரது நற்பண்புகள் யாவை ?

5. கவிஞர் இயற்றிய நூல்களில் நான்கின் பெயர்களைக் கூறுக.

3. தெரிந்துகொள் :

தந்தை, மகன், சிறுவன்—இவை ஆணைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள்.

தாய், மகள், சிறுமி—இவை பெண்ணைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள்.

ஆணைக் குறித்து நிற்கும் சொல் **ஆண்பால்** ஆகும்.

பெண்ணைக் குறித்து நிற்கும் சொல் **பெண்பால்** ஆகும்.

கீழ்க்காணும் சொற்களில் ஆண்பால் பெயர்களும், பெண்பால் பெயர்களும் கலந்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்பால் பெயரையும் எடுத்தெழுதி, அதற்கு நேராக அதன் பெண்பால் பெயரையும் எடுத்து எழுது :

ஒருவன்	வேலைக்காரன்	நல்லவள்
அரசன்	கிழவி	வேலைக்காரி
கிழவன்	அக்காள்	ஒருத்தி
அரசி	நல்லவன்	அண்ணன்

23. கால்நடைகளின் பாதுகாப்பு

நமது வீடுகளில் வளர்க்கும் உயிரினங்களில் முக்கியமானவை ஆடு மாடுகளே. இவைகளைக் கால்நடைகள் என்றும் கூறுவதுண்டு. நமது வாழ்க்கையில் இவை பல்வேறு வகைகளில் நமக்குப் பயன்படுகின்றன.

எளிய குடும்பத்தினர் பசுக்களையும், எருமைகளையும் வாங்கி வளர்த்து, அவைகளிடமிருந்து கிடைக்கும் பாலையும், பாலிலிருந்து எடுக்கப்படும் தயிர், மோர், வெண்ணெய், நெய் இவற்றையும் விற்று, அதனால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். பசுவின் பாலில் நமது உடல் நலத்திற்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் இருப்பதால் குழந்தைகள்முதல் முதியோர்வரை அனைவருக்கும் அது ஒரு சிறந்த உணவாகும். ஏரில் பூட்டி நிலங்களை உழுவதற்கும், வண்டிகளை இழுப்பதற்கும் எருதுகள் பயன்படுகின்றன. வெள்ளாட்டின் பாலைச் சிலர் அருந்துகிறார்கள். செம்மறியாட்டின் உரோமத்தினால் கம்பளிகள் நெய்கிறார்கள். மேலும், கால்நடைகளின் எரு வயலுக்குச் சிறந்த உரமாகும்.

இவ்வாறு கணக்கற்ற வகைகளில் நமக்குப் பயன்படும் வாயில்லாப் பிராணிகளாகிய ஆடுமாடுகளைச் சீரிய முறையில் பாதுகாப்பது நமது கடமையல்லவா? நம் நாட்டுக் கால்நடைகள் போதிய உணவு கிடைக்காமலும், சரியான பாதுகாப்பு இல்லாமலும், பெரும்பாலும் இளைத்து, வலிமை குன்றியிருக்கின்றன. இதனால் அவை தரும் பயனும் மிகமிகக் குறைவாகவே இருக்கிறது.

கால்நடைகளை வைத்து வளர்ப்பதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, அவற்றின் உணவு அல்லது தீவனம் ஆகும். புல், வைக்கோல், சோளத் தட்டை, தவிடு, பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை, சிறிதளவு உப்பு முதலியன ஆடுமாடுகளுக்குத் தேவையாகும் உணவாகும். இவை பூச்சி புழுக்கள் இல்லாமலும், மண்ணும் கல்லும் சேர்ந்திராமலும் தூயனவாக இருக்கவேண்டும். கால்நடைகளுக்கு வேண்டிய எல்லா உணவுச் சத்துக்களும் நிரம்பிய தீவனம் பசும்புல்லேயாகும். ஆகையால், கிராமங்களில் மாடுகள் மேய்வதற்கென்று புல் தரையும் மந்தைவெளியும் தனியாக இருக்கவேண்டும்.

கண்ட தண்ணீரைக் குடிக்கவிடாமல், தொட்டியில் நிரப்பிய தூய நீரையே காலை, மாலை இரு வேளைகளிலும் கால்நடைகளுக்குக் காட்டவேண்டும். தானியக் கழிவு நீரில் தவிட்டுச் சத்துக்கள் கலந்திருப்பதால் அந்நீரும் அவற்றிற்கு ஏற்றதேயாகும்.

நமக்குத் தூய காற்றும், கதிரவன் ஒளியும் எவ்வாறு தேவையோ அவ்வாறே கால்நடைகளுக்கும் அவை இன்றியமையாதனவாகும். ஆதலால், ஆடு மாடுகள் கட்டும் தொழுவங்கள் காற்றோட்டமும் ஞாயிறின் ஒளியும் வரக் கூடியனவாக இருக்கவேண்டும்.

கால்நடைகளுக்குக் காலரா, சுரம் கோமாரி, தொண்டையடைப்பான் முதலிய தொற்று நோய்கள் வருவதுண்டு. அக் காலங்களில் அவை உணவு உட்கொள்ள மாட்டா; அசை போடவும் செய்யா. நோயுள்ளவைகளைத் தனித்துக் கட்ட வேண்டும். கால்நடை மருத்துவ விடுதிகளுக்கு அவைகளை ஓட்டிச் சென்று சிகிச்சை அளிப்பதும் தேவையாகும்.

வாயில்லா உயிர்களாகிய ஆடு மாடுகளை நாம் அன்பாக நடத்தவேண்டும்.

வேலை செய்யும் மாடுகளை அடிப்பது, தாற்றுக் கோலால் குத்துவது போன்ற கொடூரச் செயல்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அவைகளைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதே நலம்.

நமது நாட்டின் உணவுப் பெருக்கத்திற்கும், செல்வ வளர்ச்சிக்கும் கால்நடைகள் இன்றியமையாதன. ஆதலால், அவைகளை நன்முறையில் பாதுகாப்பது நாட்டுப் பணியாகும்.

1. பாலைப் பொழிந்து தரும் பாப்பா—அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா.

*   *   *

*   *   *

2. வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுது வரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

—அமரகவி பாரதியார்

பயிற்சி

1. சொல்வளம் :

வாயில்லா = பேசுந்திறமையில்லாத; தீவனம் = ஆடு மாடுகளின் உணவுப் பொருள்கள்; தாறு = இரும்பு முள்.

2. வினாக்கள் :

1. பாலிலிருந்து எடுக்கப்படும் பொருள்கள் நான்கு சொல்.

2. எருதுகள் எவ்வாறு பயன்படுகின்றன ?

3. கால்நடைகளின் உணவுப்பொருள்கள் ஆறு கூறுக.

4. ஆடு மாடுகள் கட்டும் தொழுவங்கள் எவ்வாறு இருக்கவேண்டும் ?

5. கால்நடைகளுக்கு நோய் கண்டிருப்பதை எவ்வாறு அறியலாம் ?

6. நோயுள்ள பிராணிகளை என்ன செய்ய வேண்டும் ?

7. கால்நடைகளிடம் நாம் எவ்வாறு பழக வேண்டும் ?

3. செயல் முறை :

1. கன்றுக்குட்டிகளுக்குத் தண்ணீர் காட்டவும், புல் கொடுக்கவும் பழகிக்கொள்.

2. தொழுவங்களைத் துப்புரவாக வைக்க உதவி செய்.


4. தெரிந்துகொள் :

நான், நாம், நாங்கள்—இச் சொற்கள் பேசுவோனை யும் அவனைச் சார்ந்தோரையும் குறிப்பதால் **தன்மை இடம்** எனப்படும்.

நீ, நீர், நீங்கள்—இச் சொற்கள் பேசுவோனுக்கு முன்னே நிற்பவர்களைக் குறிப்பதால் **முன்னிலை இடம்** எனப்படும்.

அவன், அவள், அவர்கள் (அது, அவை)—இச் சொற் கள் தன்னையும், தன்முன் நிற்பவனையும் அல்லாது பிறரைக் குறிப்பதால் **படர்க்கை இடம்** எனப்படும்.

24. குதிரைகள் புலம்பல்



கற்றுத் தெளிந்தநல் மானிடரே—எம்மைக்
காக்கப் பிறந்த பெரியோரே
சற்றும் அறிவிலா எம்மொழிக்குச்—செவி
சாய்க்கத் திருவுளங் கொள்வீரே. 1

பற்றி முதுகினில் ஏறிக்கொள்வீர்—எம்மைப்
பட்சிகள் போலப் பறக்கச்செய்வீர்
சற்றும் இரக்கம் இலாதவரோ—நீங்கள்
சாத்திரம் கற்ற பயன்இதுவோ? 2

வண்டியில் கொண்டெமை மாட்டுகின்றீர்—காலை
மாலையெலாம் தட்டி ஓட்டுகின்றீர்
நொண்டினாலும் விட்டுப் போகமாட்டீர்—உடல்
நோவ அடித்து வெருட்டுகின்றீர். 3

மேடு பள்ளங்களில் ஓடவேண்டும்—வெய்ய
வேனில் மழைகளில் ஓடவேண்டும்;
காடு செடிகளில் ஓடவேண்டும்—இந்தக்
கஷ்டங்கள் யாரிடம் சொல்வோமையா? 4

சித்தம் இரங்கிட வேண்டுகின்றோம்—எம்மைச்
சேமமாய்க் காத்திடக் கெஞ்சுகின்றோம்;
புத்த முனியருள் போதனையை—என்றும்
போற்றுதல் உங்கள் கடனாமே. 5

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

பயிற்சி

1. சொல்வளம்:

கற்றுத்தெளிந்த=படித்தறிந்த; செவிசாய்க்க= காதால் கேட்க; திருவுளம்=மனம்; வெய்ய= வெப்பமான; வேனில்=கோடைக்காலம்; சித்தம்= மனம்; சேமமாய்=நலமாய்; புத்த முனி=புத்தர் பிரான்; அருள்=அருளிய; கஷ்டங்கள்=துன்பங்கள்.

2. வினாக்கள்:

1. குதிரைகளுக்கு மக்கள் செய்வதாகக் கூறப்படும் கொடூரச் செயல்கள் மூன்று கூறுக.

2. இறுதியில் குதிரைகள் வேண்டிக்கொள்வது யாது?

3. குதிரைகள் எவ்வாறு நயமாகவும், மரியாதையாகவும் தங்கள் குறைகளைத் தெரிவிக்கின்றன?

4. புத்தர் அருளிய போதனை யாது?

25. திருநீற்று மதில்

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் காவிரி, கொள்ளிடம் இவ்விரண்டு ஆறுகளுக்கும் இடையில் **திருவானைக்கா** என்னும் சிறந்த சிவத்தலம் ஒன்று உண்டு. இத் தலத்தி லுள்ள சிவன் கோயிலைச் சுற்றி உயர்ந்து நிற்கும் வெளிப்புற மதிலுக்குத் **திருநீற்று மதில்** என்ற பெயர் இன்றும் வழங்கப்படு கிறது. இப்பெயர்க் காரணம்பற்றிக் கர்ண பரம்பரையாக ஒரு கதை நிலவுகிறது.

நெடுங்காலத்துக்குமுன் வாழ்ந்த சோழ அரசர்களுள் **கோச்செங்கணார்** என்பவர் இந்த ஊரிலுள்ள சிவாலயத்தைப் பெரும் பொருள் செலவிட்டுக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தார். அவர் அதற்கெனத் தனி அமைச்சர் ஒருவரை நியமித்து, கோயிலை விரைவில் கட்டிமுடிக்குமாறு கட்டளையிட் டார். இவ் வமைச்சர் கடவுட் பற்று மிகுந்தவர்; நற்பண்புகள் வாய்ந்தவர். இவர் திருவானைக்காவிலேயே தங்கி, ஆயிரக் கணக்கான ஆட்களை அமர்த்தி, ஆலயத் திருப்பணியைத் தொடங்கினார்.

"கூத்தாடி கிழக்கே பார்த்தான்; கூலிக்காரன் மேற்கே பார்த்தான்" என்ற பழமொழிக்கிணங்க, வேலையாட்கள் தமக்கு இடப்பட்ட அலுவல்களை ஊக்கத்துடன் செய்யாமல் காலங்கடத்திவந்தனர். இதனால் கோயில் திருப்பணி நீண்டகாலம் தாமதப் பட்டது. இதை யறிந்த சோழ வேந்தர் அமைச்சரை அழைத்து, வேலை முடிவு பெறுமைக்காகத் தமது வருத்தத்தைத் தெரிவித்தார். மேலும், மூன்று மாத காலத்திற்குள் ஆலயத்தின் எல்லாப் பகுதி களையும் கட்டிமுடித்து, குடநீராட்டு விழாவுக்கு நன்னாள் குறிப்பிடவேண்டும் என்றும் அவர் ஆணையிட்டார். அவ்வாறு செய்யத் தவறினால் அமைச்சரைப் பதவியி னின்று நீக்கிச் சிறையில் இடுவதாகவும் அரசர் அச்சமுறுத்தினார்.

அமைச்சர் மன்னரது உத்தரவை வேலையாட்களுக்குத் தெரிவித்து, எஞ்சி யிருந்த கட்டடங்களை விரைவில் முடிக்கு மாறு கேட்டுக்கொண்டார். ஆனால் அவர்கள் வழக்கம்போல் சோம்பலை மேற்கொண்டு, உண்மையாக உழைக்கவில்லை. அரசர் குறிப்பிட்ட தவணை நெருங்கியது; வெளிப் புற மதில் எழுப்புவது மீதியாக நின்றது.

இம்மதிலே உட்புறச் சுவர்களைவிட மிக்க உயரமும் நீளமும் உள்ளது. விரைவில் முடியப்பெருவிடின் மன்னரின் சீற்றத்துக்கு உள்ளாகவேண்டுமேயென்று அமைச்சர் கவலைகொண்டார். கோயிலிலுள்ள சிவபெருமானின் திருவுருவத்தின்முன் நின்று அவர் தமது கவலையைத் தெரிவித்துக்கொண்டார்; அதைத் தீர்த்துவைக்குமாறும் முறையிட்டார்.

கடவுளும் மனமிரங்கி மறுநாட் காலை ஒரு சிவனடியார் உருவம் பூண்டு அமைச்சர் முன்னிலையில் தோன்றினர்; அரசர் குறிப்பிட்ட தவணைக்குள் வெளிப்புற மதிலைத் தாம் மேற்பார்வையிட்டுக் கட்டி முடிப்பதாகத் தெரிவித்து இசைவு வேண்டினர். ‘கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல்’ சிவனடியார் வந்ததைக் கண்ட அமைச்சர் தமது கவலை நீங்கப்பெற்று, திருப்பணி வேலையை அவரிடம் ஒப்படைத்தார்.

சிவனடியார் சிற்பிகளையும், கொத்தர்களையும், பிற பணியாட்களையும் ஏவி, மதில் வேலையைத் தொடங்கினர். அன்று மாலைப் பொழுதில் வேலை முடிந்ததும் பணியாளர்

களுக்கு வழக்கம்போல் கொடுத்துவந்த கூலிப் பணத்துக்குப் பதிலாகச் சிவனடியார் திருநீற்றுப் பொட்டலங்களை ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அளித்தார். 'வீட்டிற்குச் சென்றபிறகே பொட்டலங்களைப் பிரித்துப் பார்க்கவேண்டும்' என்றும் அவர் வற்புறுத்திக் கூறினர்.

வீடு திரும்பியதும் கூலியாட்கள் தமது பொட்டலங்களைப் பிரித்துப் பார்த்தனர். பலரும் வெவ்வேறு தொகை பொட்டலங்களில் இருக்கக் கண்டனர். பெருந் தொகை பெற்றவர் மகிழ்ச்சி எய்தினர்; குறைந்த கூலி கிடைத்தவர்கள் வருத்தமுற்றனர். இதன் கருத்து விளங்காமல் பலர் இரவில் உறக்கங்கொள்ளவில்லை.

மறுநாள் பொழுது விடிந்ததும் எல்லோரும் சிவனடியாரிடம் சென்று அவரைச் சூழ்ந்துகொண்டனர். கூலி கொடுப்பதில் ஓரவாரம் காட்டியதாக எடுத்துக் கூறி, எல்லோருக்கும் ஒரே அளவுச் சம்பளம் கொடுக்குமாறு அவர்கள் வேண்டிக்கொண்டனர். சிவனடியார், "நான் எவருக்கும் ஓரவாரம் காட்டவில்லை; எல்லோருக்கும் ஒரே அளவாகத்தான் திருநீறு அளித்தேன்.

ஆனுல் உங்களுடைய உழைப்புக்குத் தக்கபடி ஒவ்வொருவருக்கும் கூலித் தொகை வேறுபட்டிருந்தது. நீங்கள் திருப்பணியில் மிகுதியாக ஈடுபட்டு உழைப் பீர்களானுல் மிக்க ஊதியம் கிடைக்கும்; என்னைக் குறைகூறுவதில் பயனில்லை" என்று விளம்பினுர்.

அன்றுமுதல் வேலையாட்கள் அனை வரும் பெரிதும் ஊக்கம்காட்டி வேலை செய்துவந்தனர். அதனுல் அவர்கள் ஒவ் வொருவருக்கும் நிறைய ஊதியம் கிடைத் தது; மதில் வேலையும் விரைவில் முடிந்தது.

இதை யறிந்த அமைச்சர் பெரும் மகிழ்ச்சி கொண்டார். எல்லோரும் சிவனடியாரின் கடவுட் தன்மையை உணர்ந்தார்கள். குறித்த காலத்தில் குடநீராட்டு விழா நடைபெற்றது. விழா முடிந்ததும் சிவனடியார் மறைந்தருளினுர். திருநீற்றை ஊதியமாகக் கொடுத்து இந்த வெளிப்புற மதில் கட்டப்பட்டதால் இதற்குத் **திருநீற்று மதில்** என்றும், இதன் புறத்திலுள்ள சுற்று வீதிக்கு **விபூதிச் சுற்று வழி** என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

இவ்வரலாறு மெய்யாயினும் பொய்யாயினும், "எந்த அலுவலைச் செய்தாலும் நமது ஊக்கத்துக்கும் உழைப்புக்கும் தக்கவாறு இறைவன் படியளப்பான்" என்ற உயரிய நீதியை இக்கதை நமக்கு நன்ருய் அறிவுறுத்துகிறதல்லவா?

பயிற்சி

1. சொல்வளம்:

மதில் = கோவிலைச் சுற்றியுள்ள சுவர்; குடநீராட்டு விழா = கும்பாபிடேகம்; எஞ்சியிருந்த = மிகுதியாக இருந்த; தவணை = குறித்த காலம்; சீற்றம்=கோபம்; விளம்பினர் = சொன்னர்; திருநீறு=விபூதி; கர்ணபரம்பரையாக=காது வழியாகக் கேட்டுவந்த; அச்சமுறுத்தினர் = பயமுறுத்தினர்; நன்னாள் = நன்மை + நாள்; ஓரவாரம்=பாரபட்சம்.

இங்கு இறைவனை யானை யொன்று வழிபட்ட காரணமாக இந்த ஊருக்குத் **திருவானைக்கா** என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். கா = சோலை.

2. வினக்கள்:

1. கோயில் கட்டுவதில் தாமதம் ஏற்பட்டதற்காக வேந்தர் அமைச்சரிடம் யாது கூறினர்?

2. அமைச்சர் சிவபெருமானிடம் வேண்டிக் கொண்டது யாது?

3. திருநீற்று மதில் என்ற பெயர் வந்த வரலாற்றைக் குறிப்பிடுக.

4. இவ்வரலாற்றினல் அறியப்படும் நீதி யாது?

3. தெரிந்துகொள் :

(*i*) **வேலையாட்கள் வந்தார்கள்.**

இந்த வாக்கியத்தில் 'வந்தார்கள்' என்னும் வினைச்சொல் பயனிலை எனப்படும்.

யார் வந்தார்கள்? வேலையாட்கள்.

வேலையாட்கள் என்னும் பெயர்ச்சொல் **எழுவாய்** ஆகும்.

ஒவ்வொரு வாக்கியத்திலும் பயனிலைக்குமுன் **யார்** அல்லது **எது** அல்லது **எவை** என்று சேர்த்துக் கேள்வி கேள். வரும் விடை **எழுவாய்** ஆகும்.

ஒரு வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் முக்கிய உறுப்புக்கள். இவை இல்லாமல் வாக்கியங்கள் அமையா.

(*ii*) **இங்கு வா.**

இந்த வாக்கியத்தில் '**வா**' என்னும் வினைச்சொல் **பயனிலை.**

எழுவாய் கண்டுபிடிக்க 'யார் வா?' என்று கேட்டால் 'நீ வா' என்பது விடை. ஆதலால் இந்த வாக்கியத்தில் நீ என்பது எழுவாய். வாக்கியத்தில் இல்லாமல் மறைந்து நிற்பதால் 'நீ' என்பது **தோன்றா எழுவாய்** எனப்படும்.

(*iii*) **எழுவாய், பயனிலை கண்டுபிடி :**


சிவனடியார் கூறினர்.

குடநீராட்டு விழா நடைபெற்றது.

பாடத்தைப் படியுங்கள்.

26. வானொலி

சிறுவர் சிறுமிகளே ! ரேடியோ என்கிற வானொலிப் பெட்டியை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? உங்கள் வீட்டில் ரேடியோப் பொறி இருக்கிறதா?




ரேடியோப் பொறி

இக்காலத்தில் வானொலிப் பொறிகளை வாங்கி, சொந்த வீடுகளிலும், பொது விடங்களிலும் வைத்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். வானொலிப் பெட்டியின் உதவியால் உலகின் பல இடங்களிலும் நிகழும் செய்திகளையும், பாட்டுக்களையும், பேச்சுக்களையும் இடையே எவ்விதக் கம்பியுமில்லாமல் நமது வீடுகளில் இருந்தபடியே கேட்டறிகிறோம். இது விந்தையே !

வானொலிக் கருவிகள் தோன்றிச் சிறிது காலமே யாயினும் மிக விரைவில் அவை மலிந்து பயன்தர வந்துவிட்டன. உலகச் செய்திகள், இசைக் கச்சேரிகள், அன்றாட விலைவாசிகள், காலநிலை அறிவிப்புக்கள், சிறுவர்க்கான கதைகள் முதலியன வானொலிமூலம் ஒலி பரப்பப்படுவதை அதே நேரத்தில் கேட்டறிகிறோம். மேலும், கல்வி பற்றிய பாடங்களும் வானொலிமூலம் கற்பிக்கப்படுகின்றன. இவ்வாறு நமது அறிவு வளர்ச்சிக்கும், பொழுதுபோக்குக்கும், மனமகிழ்ச்சிக்கும் வானொலி ஓர் அரிய கருவியாகப் பயன்படுகிறது.

வானொலிப் பெட்டி வழியாக நமது காதில் விழும் ஒலிகளை முதலில் ஓரிடத்தில் உண்டாக்கி வான வெளியில் பரப்புகிறார்கள். இவ்வாறு ஒலி பரப்பப்படும் இடம் **வானொலி நிலையம்** எனப்படும்.



1. வானொலி நிலையம்
2. ஒலி பரப்புமிடம்

நமது தமிழ் நாட்டில் வானொலி நிலையம் ஒன்று **சென்னையிலும்** மற்றொன்று **திருச்சிராப்பள்ளியிலும்** நிறுவப்பட்டுள்ளன. ஒலிபரப்பும் வானொலி நிலையங்களில், தனியறை ஒன்றில் பேசுபவர்களோ, பாடுபவர்களோ உண்டாக்கும் ஒலிகளைப் பெற்று அனுப்புவதற்குச் சில மின்சாரக் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு **ஒலியனுப்புங் கருவிகள்** என்று பெயர்.

வீடுகளில் வாங்கி வைத்திருக்கும் வானொலிப் பெட்டியிலுள்ள கருவிகள், ஒலி பரப்பும் நிலையங்களிலிருந்து வரும் ஒலிகளை ஏற்று, நமது காதில் விழச் செய்கின்றன. ஆதலால், வானொலிப் பெட்டி ஒலி **ஏற்கும் கருவியாகும்.**

வானொலிக் கருவிகள் மின்சார ஆற்றலால் இயங்குகின்றன. அவற்றின் அமைப்பைப் பற்றியும், அவை இயங்கும் முறையைப் பற்றியும் மேல் வகுப்புக்களில் விவரமாகப் படித்தறியலாம்.

“காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்”

என்று **அமரகவி பாரதியார்** பல ஆண்டுகட்கு முன் பாடியது இன்று உண்மையாகி விட்டது அல்லவா?

பயிற்சி

1. சொல்வளம் :

பொறி = இயந்திரம்; காஞ்சி = காஞ்சீபுரம்.

2. வினாக்கள் :

1. வானொலிப் பெட்டி எவ்வாறு ஓர் விந்தையாகும்?

2. வானொலிப் பெட்டி நமது அறிவு வளர்ச்சிக்கு எவ்வாறு ஒரு கருவியாகும்?

3. வானொலிபற்றித் தேவையாகும் இரு வகைக் கருவிகள் யாவை?

4. தமிழ் நாட்டில் வானொலி நிலையம் எந்த இரண்டு இடங்களில் உள்ளன?

3. தெரிந்துகொள் :

1. நான் நேற்று ரேடியோ **கேட்டேன்.**
நான் இப்போது ரேடியோ **கேட்கிறேன்.**
நான் நாளை ரேடியோ **கேட்பேன்.**
இவைகளில் **கேட்டேன் — இறந்தகாலம்**
கேட்கிறேன் — நிகழ்காலம்
கேட்பேன் — எதிர்காலம்

2. பின்வரும் வாக்கியங்களில் வினைச்சொற்களின் காலம் சரியாக இல்லை. திருத்தி வாசி.

கண்ணன் நேற்று பந்து ஆடுகிறான். அப்போது கல் தடுக்கிக் கீழே விழுவான். காலில் சிராய்த்து இரத்தம் வரும். அண்ணன் மருந்து தடவுகிறான். நாளை காயம் ஆறிவிட்டது.

27. பூக்களின் பாட்டு

('முத்திநெறி யறியாத' என்ற மெட்டு)

சிறுமிகள் :

ஆற்றங்கரை ஓரத்திலே
அழகான தோட்டத்திலே
பூத்திருக்கும் பூவையெல்லாம்
போய்ப்பார்ப்போம் நாமெல்லாம்.

முல்லைப் பூ :

முல்லைஎன்னும் பெயருடையேன்
முடிவில்அழகும் நானுடையேன்
எல்லைஇல்லா மணமுடையேன்
எங்கும்குலவும் குணமுடையேன்.

தாமரைப் பூ :

கண்ணைக்கவரும் தாமரைநான்
கருத்துக்கினிய நன்மலர்நான்
விண்ணில்திரியும் சூரியனை
விரும்பிமலர்வேன் நாள்தோறும்.

ரோஜாப் பூ :

அழகும்மணமும் மிகவுடையேன்
அதிகவிலைக்கே வந்தடைவேன்
மொழியும்ரோஜா என்பெயர்தான்
மோகனரோஜா என்பெயர்தான்.

(கும்மி மெட்டு)

மல்லிகைப் பூ :

மன்னர் விரும்பும் உயர்வுடையேன்—நல்ல
மல்லிகை என்னும் பேயருடையேன்
மன்னும் மணமுடன் என்போலே—இந்த
மாநிலம் தன்னில் எவருண்டு ?

அந்திமந்தாரைப் பூ :

அந்தி நேரத்தில் அலர்ந்திடுவேன்—வீசி
அடிக்கும் காற்றில் ஆடிடுவேன்
மந்தாரை என்னும் பேயருடையேன்—புவி
மாந்தர் மகிழும் அழகுடையேன்.

பூக்கள் :

காட்டிலும் நாட்டிலும் மலர்ந்திடுவோம்—நாங்கள்
காற்றில் மணத்தைக் கலந்திடுவோம்
பாட்டினில் நாங்கள் அன்புவைத்தே—நாளும்
பாடும் ஈக்குத் தேன் அளிப்போம்.

இறைவன் படைத்தான் இங்குவந்தோம்—அந்த
இறைவன் அழைத்தால் ஏகிடுவோம்.
எங்கள் வாழ்வு சிறிதேனினும்—நாங்கள்
எவர்க்கும் இன்பம் தருவோமே.

சிறுமிகள் :

மல்லிகை முல்லை தாமரையே—உயர்
மாண்பு நிறைந்தோளிர் ரோஜாவே
எல்லையில் அழகுடை மந்தாரையே—உங்கள்
எழில்நலங் கண்டு மகிழ்கின்றோம்.

பயிற்சி

1. சொல்வளம் :

முடிவில் = முடிவில்லாத; விண் = வானம்; மோகன = மயங்கச் செய்யும்; மன்னும் = மிகவும்; மாநிலம்=பெரிய பூமி; புவி=பூமி; மாண்பு=அழகு, பெருமை; ஒளிர்=ஒளி செய்தல்; எழில் = அழகு; முடிவு + இல் = முடிவில்; ஆறு + கரை = ஆற்றங் கரை; நிறைந்து + ஒளிர் = நிறைந்தொளிர்.

2. நடித்தல் :

இந்தப் பாடத்தில் வந்துள்ள பாட்டுக்களை மனப் பாடஞ் செய்து, ஒவ்வொருவர் ஒவ்வொரு வகைப் பூவைக் கையில் வைத்துக்கொண்டு அப் பூ கூறுவது போல் பாட்டைச் சொல்லி நடிக்கவும்.

3. தெரிந்துகொள் :

(*i*) பொருத்தமான எழுவாய் எழுது :

—— போய்ப் பார்ப்போம். —— படைத்தான்.
—— மலர்கின்றன. —— கட்டுகிறாள்.

(*ii*) பொருத்தமான பயனிலை எழுது :

அந்தி நேரத்தில் ——. நாம் வீட்டில்——.
பறவைகள் ஆகாயத்தில்—. பசுக்கள் புல்லை ——.
குடியானவன் ஏர் ——.

28. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை

கோதாவரிக் கரையிலுள்ள ஒரு மரத் தடியில் வேடன் ஒருவன் வலையை விரித்து, பலவகையான தானியங்களை இறைத்து விட்டுச் சிறிது தொலைவிலிருந்த செடியின் மறைவில் பதுங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது சித்திரக்கிரீவன் என்னும் புறுவரசன், தனது பரிவாரமாகிய மற்றப் புறுக்களுடன் இரைதேடும்பொருட்டு அம் மரத்தில் வந்து உட்கார்ந்தது; மரத்தடியில் கிடக்கும் தானியங்களைத் தின்ன ஆவல் கொண்ட மற்றப் புறுக்களைப் பார்த்து, "மனித நடமாட்டமில்லாத இக் காட்டில் தானியங்கள் எப்படி வரும்? யாரேனும் வஞ்சகமாக அவைகளைத் தூவியிருக்க வேண்டும். நாம் அவற்றினருகில் செல்லக் கூடாது" என்று கூறிற்று.

அதைக் கேட்ட ஒரு புறு செருக்கோடு, "இவ்விதம் எண்ணிக்கொண்டிருந்தால் ஓர் இரையும் அகப்படாது. மேலும், வெட்கப் படுகிறவன், பொறுமையுள்ளவன், தீராத ஐயமுள்ளவன் இவர்கள் ஒருபொழுதும்

நலமடையமாட்டார்கள். நாம் அஞ்சாமல் போய்த் தின்போம்" என்றது. இம்மொழிகளைச் செவியுற்ற அதன் தோழர்களெல்லாம் தானியத்தைத் தின்னும் விருப்பத்தால் நிலத்திலிறங்கி வலையில் சிக்கிக் கொண்டன. அதைக் கண்ட சித்திரக்கிரீவன், "எல்லோரும் என் சொல்லைக் கேளாமற் போனார்கள். இப்போது நான் ஒன்றியாய் இருந்து பயனில்லை. வாழ்விலும் தாழ்விலும் எனது பரிவாரங்களுடன் இருப்பதே என் கடமை" என்று சொல்லி, அதுவும் வலையில் விழுந்து அகப்பட்டுக் கொண்டது.

பறவைகள் வலையிற் சிக்கிக்கொண்டதைப் பார்த்த அவ்வேடன், அவ்விடத்தை நோக்கி வரத்தொடங்கினான். புறாக்கள் நடுநடுங்கித் தங்கள் மன்னனைப் பார்த்து, "உங்கள் அறிவுரையை மீறாமல் மரத்திலேயே இருந்திருந்தால் நமக்கு இந்நிலை வந்திராது" என்றன. சித்திரக்கிரீவன், "இப்பொழுது அதைச் சொல்லிப் பயன் யாது? நாம் ஒன்று செய்தால் உயிர் தப்பலாம். நான் அதைச் சொல்லுகிறேன். அதையாவது இப்பொழுது செய்யுங்கள். எல்லோரும் வலையோடுகூட ஒருமிக்கப்

பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் தப்பமுடியும்" என்று வழி கூறியது. உடனே எல்லாப் பறவைகளும் வலையோடுகூட நொடியிற் பறந்துபோயின.

அதைத் தொலைவிலிருந்து பார்த்த வேடன், "இப்பறவைகள் ஒன்றாய்க்கூடி



வேடனும் புறாக்களும்

வலையைக் கொண்டுபோயின" என்று சொல்லி வியப்படைந்து அவைகளின்

பின்னே ஓடும்போது புருக்கள் கண்ணுக்கு மறைந்துபோய்விட்டன. பிறகு அவன், "பறவைகள் தவறியதோடு வலையையும் இழக்க நேர்ந்ததே" என்று மன வருத்தத்துடன் வீடு திரும்பினான்.

புருவரசன் தனது கூட்டத்தைப் பார்த்து, "அருகிலுள்ள காட்டில் என் நண்பனான இரணியகன் என்னும் எலி அரசன் இருக்கிறான். அவன் பற்களினால் இந்த வலையை யறுப்பான். ஆகையால் அங்கே பறந்து செல்லுவோம்" என்றது. புருக்களும் அவ்விதமே பறந்து சென்று எலி அரசன் வளையருகில் இறங்கின.

ஏதாவது பெருங்கெடுதி நேர்ந்தால் தப்பித்து ஓடும்பொருட்டுத் தன் வளைக்கு நூறு வழிகள் செய்துகொண்டு அதில் இரணியகன் என்னும் எலி வாழ்ந்து வந்தது. அது புருக்கள் இறங்கிய சலசலப்பைக்கேட்டு அஞ்சி வெளிவராமலிருந்தது. அப்பொழுது சித்திரக்கிரீவன், "நண்பனே! நான்தான் புரு அரசன்" என்றது. இரணியகன் அதைத் தன் தோழனது குரல் என்று அறிந்து, களிப்

புடன் விரைவாக வளையினின்று வெளி வந்தது. சித்திரக்கிரீவன் நிகழ்ந்ததைக் கூறி, வலையை அறுத்து எல்லோரையும் விடுவிக்குமாறு வேண்டிற்று. அதற்கு எலி அரசன், "என் பல் மிகவும் மெல்லியது. எனக்கு ஆற்றலும் குறைவு. ஆதலால் நீ அகப்பட்டுக் கொண்டிருக்கும் கயிறுகளை யறுத்து உன்னை மட்டும் விடுவிக்கிறேன்" என்று பதிலளித்தது. அதைக் கேட்ட புருவரசன், "அது சரியன்று. முதலில் எனது பரிவாரங்களைக் காப்பாற்று; பிறகு என்னை விடுவி" என்று வற்புறுத்தியது. அப்பொழுது எலி அரசன், "நண்பா! நீ தன்னலங்கருதாதவன்; அடுத்தவர்களை ஆதரிக்கிறவனுயிருக்கிறாய்" என்று கூறி எல்லாவற்றின் கயிறுகளையும் அறுத்து, பின்பு சித்திரக்கிரீவனுடைய கட்டையும் துணித்து, எல்லாப் புருக்களையும் விடுவித்தது. புருக்கள் தமது அரசனது பெருந்தன்மையையும் எலி அரசனது பேருதவியையும் புகழ்ந்து, நன்றிகூறி சித்திரக்கிரீவனுடன் தம் இருப்பிடத்திற்கு ஏகின.

"சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை."

பயிற்சி

1. சொல்வளம் :

பரிவாரம் = சூழ்ந்துள்ளவர்; நொடியில் = விரைவில்; நவின்று = சொல்லி.

2. வினாக்கள் :

1. மரத்தடியில் தானியங்களைக் கண்ட புருவரசன் என்ன சொல்லிற்று?

2. எவ்விதமானவர்களுக்கு நலம் ஏற்படாது?

3. வேடன் ஏன் வருத்தப்பட்டான்?

4. எலி ஏன் புருவரசனைமட்டும் விடுவிப்பதாகக் கூறிற்று?

5. அதற்குப் புருவரசன் கூறிய பதில் யாது?

3. தெரிந்துகொள் :

சேர்ந்தேன், சேர்ந்தோம், சேர்ந்தாய், சேர்ந்தான், சேர்ந்தாள், சேர்ந்தன, சேர்ந்தது. — என சேர் என்னும் வினைச்சொல் மாறி பால், எண், இடம் காட்டுவதைக் கவனி.

பெயர்ச்சொற்களைப் போலவே வினைச்சொற்களும் பால், எண், இடம் இவற்றை ஏற்கும்.

29. நெய்வேலிப் பயணம்

[ஓர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர் தஞ்சையிலிருந்து நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்குச் சென்றுவந்த இன்பச் செலவின் விவரிப்பு ஆகும் இப் பாடம்.]

1958-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20-ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று, எமது பள்ளி மாணவ மாணவியர்களும் சில ஆசிரியர்களும் ஆக நாற்பதின்மர், வைகறையில் துயில் நீங்கினோம்; நீராடி மறு உடை அணிந்துகொண்டோம். பின்னர், பயணத்திற்கு வேண்டிய பொருள்களுடன் விடியற்காலை ஐந்து மணிக்கு ஒரு பேருந்து வண்டியில் ஏறிக்கொண்டு எமது இன்பச் செலவைத் தொடங்கினோம்.

உந்துவண்டி மிக விரைந்து சென்றது. **திருக்குடந்தை** வழியாகச் சென்று காலை 6-30 மணிக்கு **அணைக்கரையை** அடைந்தோம். இங்குக் காவிரியின் கிளை ஆறாகிய கொள்ளிடம் இரு பிரிவுகொண்டு நுங்கும் நுரையுமுள்ள நீர்த்தேக்கமாக அமைந்திருப்பதைக் கண்டோம். இவ்வாற்றின்மீது கட்டப்பட்டுள்ள **கீழ் அணை** வழியாக நடந்து

சென்று, சுற்றுப்புறத்திலுள்ள சோலைகளை யும் கழனிகளையும் கண்டு மகிழ்ந்தோம். அக் காட்சிகள் மறவாமலிருக்கும் பொருட்டு அவைகளின் புகைப்படங்கள் எடுத்தோம். காலைச் சிற்றுண்டியை இந்த ஊரில் முடித்தபிறகு உந்து வண்டியில் ஏறிக் கொண்டு நெய்வேலியை நோக்கிச் சென்றோம். வழியிலுள்ள வடலூரில் இறங்கி அங்கு இராமலிங்க அடிகளாரின் நினைவுச் சின்னமாகத் திகழும் கோயிலையும் அதன் அழகிய சிற்ப வேலைப்பாடுகளையும் கண்டு மகிழ்ந்தோம். வள்ளலாரின் அருட்பாக்கள் கோயில் சுவர்களில் பொறிக்கப் பட்டிருந்தன.

மேலும், பயணத்தைத் தொடங்கி 9-மணிக்கு நெய்வேலி போய்ச் சேர்ந்தோம். நெய்வேலி தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஊரின் ஒரு புறத்தில் சுரங்க அதிகாரிகளுக்கும், தொழிலாளர் களுக்கும் அமைக்கப்பட்ட இல்லங்களும், அரசாங்க அலுவலகங்களும் இருந்தன. சுரங்க அதிகாரி ஒருவர் எங்களை வர வேற்றுச் சுரங்கத்தைச் சுற்றிப் பார்ப்பதில் உதவிபுரிந்தார்.

குடியிருப்புக் கட்டடங்களின் எதிரில் சுமார் இரண்டு கல் தொலைவில் நிலக்கரி எடுக்கும் வெட்டுப் பகுதி இருந்தது. அனை வரும் பேருந்து வண்டியில் அமர்ந்து வெட்டுப் பகுதியை அடைந்தோம். வழியில், மேட்டுப் பகுதிகளை வெட்டித் தள்ளும் மாபெரும் மண்வெட்டி இயந்திரங்கள் மும்முரமாக வேலைசெய்துகொண்டிருந்தன. அவ்வித இயந்திரங்கள் பல, மண்ணை வெட்டி எங்கும் புழுதிப் படலத்தை எழுப்பிக்கொண்டிருந்தன.

வெட்டுப் பகுதியில் பெரும் பள்ளம் ஒன்று இருந்தது. அப்பள்ளத்தைச் சுற்றி யுள்ள வட்டமான பகுதியில், ஊர்திகள் கீழே செல்லுவதற்கு வழியொன்று வெட்டப் பட்டிருந்தது. நாங்கள் ஒருவர்பின் ஒருவ ராகக் கீழே இறங்கினோம். செம்மண்ணும், சரளையும், வெண்மையான மண்ணும் ஆங்காங்கே காணப்பட்டன. நிலத்தின் அடியில் 175 அடி ஆழத்தில் பழுப்பும், கறுப்புமான நிலக்கரிகள் பாளம் பாளங் களாகத் தென்பட்டன. அதிலிறங்கி நிலக் கரியை வெட்டி ஏற்றவும் இறக்கவும் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட சிறு தொட்டில் போன்ற பெட்டிகள் இருக்

கின்றன. ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளர் இங்கு வேலே செய்கிருர்கள்.

நிலக்கரி வெட்டியெடுப்பதில் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. நிலக்கரி வெட்டி யெடுக்கும்பொழுது தண்ணீர் குமுறிக்கொண்டு வருகிறது. இது கரியை வெட்டியெடுப்பதற்குப் பெரிய இடையூரு கும். ஆதலால் பல பெரிய குழாய்கள் நீரை இறைத்து வெளிப்படுத்திக் கொண்டிருக் கின்றன. சுரங்கத்தைச் சுற்றிப் பார்த்த பிறகு, வெயிலின் கொடுமையைப் பொருட் படுத்தாது சுரங்கத்தில் வேலேசெய்யும் மக்களின் தந்நலமற்ற உழைப்பினேப் புகழ்ந்துகொண்டு நெய்வேலி ஊருக்குத் திரும்பினேம்.

நண்பகல் உணவுக்குப்பின் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டோம். பிற்பகல் மூன்று மணிக்கு நெய்வேலியைவிட்டுப் புறப் பட்டோம். வழியில் **விருத்தாசலம்**, **சயங் கொண்ட சோழபுரம்** இவ்வூர்களேப் பார்த்துக் கொண்டு இரவு 8-மணிக்கு தஞ்சை திரும்பினேம். அன்று நாங்கள் கண்ட காட்சிகளே மனத்தில் இறுத்திக்கொண்டு இல்லம் ஏகினேம்.

பயிற்சி

1. சொல்வளம் :

இன்பச் செலவு=உல்லாசப் பயணம்; வைகறையில்=விடியற்காலையில்; துயில்=தூக்கம்; பேருந்து வண்டி=மோட்டார் பஸ்; கழனி=வயல்; திகழும்=விளங்கும்; சிற்பம்=கல்லில் அல்லது உலோகத்தில் உருவங்கள் அமைத்தல்; வள்ளலார் = இராமலிங்க அடிகள்; பொறிக்கப்பட்டுள்ளன = எழுதப்பட்டுள்ளன; மாபெரும்=மிகப் பெரிய; பிணைக்கப்பட்ட= கட்டப்பட்ட; இடையூறு = தடங்கல்; தந்நலம் = தம் + நலம்; தன்னலம்=தன் + நலம்; நண்பகல்= நடுப்பகல்.

இராமலிங்க அடிகள் பாடியுள்ள பாடல்களுக்கு அருட்பா என்று பெயர்.

2. தெரிந்துகொள் :

ஒரு வாக்கியத்தின் பயனிலை எண், பால், இடம் இவைகளில் எழுவாயோடு ஒத்திருக்கவேண்டும்.

மாதிரி :

கண்ணன் வந்தான்.	நீங்கள் வந்தீர்கள்.
கமலம் வந்தாள்.	மாடு வந்தது.
அவர்கள் வந்தார்கள்	மாடுகள் வந்தன.

பின்வரும் வாக்கியங்களைத் திருத்தி எழுது :

நாங்கள் அணைக்கரையை அடைந்தேன்.
அவர்கள் துயில் நீங்கினோம்.
பல தொழிலாளர் வேலை செய்கின்றன.
பாட்டி சோறு சாப்பிட்டது.
மாடுகள் மேய்ந்தது.

30. யானைக்கும் பானைக்கும் சரி

தென்னாட்டில் வாழ்ந்த செல்வன் ஒருவன், தன் ஒரே மைந்தனது திருமணத்தில் ஊர்வலம் நடத்துவதற்காக ஒரு மாவுத்தனிடம் சென்று அவனுடைய யானையைக் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டான். அம் மாவுத்தனும் அவ்வாறே செய்ய, திருமண ஊர்வலம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆனால், ஊர்வலம் முடிந்ததும் அந்த வேழம் தற்செயலாய்க் கீழே விழுந்து உயிர் துறந்தது.

அதுபொழுது யானைப்பாகன் செல்வனை நோக்கி, "உன் வீட்டுத் திருமணத்திற்கு வந்தமையால் என் யானை இறந்துவிட்டது, அதற்கு நீ யாது சொல்கிறாய்?" என்று சினந்து கேட்டான். "எதிர்பாராத வகையில் யானை மரித்து விட்டதால், அதன் விலையைத் தருகிறேன்; அல்லது வேறொரு யானையை வாங்கித் தருகிறேன்" என்று செல்வன் மறுமொழி பகர்ந்தான். முரட்டுத் தன்மையுடைய அந்த மாவுத்தன், "இறந்து போன என் யானையே வேண்டும்; அதற்கு ஈடாகப் பணமோ, வேறு யானையோ வேண்டாம்", என்று வீண் பிடிவாதம் செய்

தான். பின்பு, அவன் மன்னனிடம் சென்று செல்வன் மீது வழக்குத் தொடுத்தான்.

மன்னன் செல்வனை வரவழைத்து, நடந்த செய்தியைக் கேட்டறிந்தான். பிறகு வேந்தன் மாவுத்தனை நோக்கி, "யானை இறந்ததற்கு எவரும் பொறுப்பாகார். அதற்கு ஈடாகப் பணமாவது, வேறு யானை யாவது பெற்றுக்கொள்; அதுதான் முறை யாகும்" என்று நவின்றான். அதற்கு முரட்டு மாவுத்தன், "எனக்கு என் யானையே வேண்டும்; வேறென்றும் பெற்றுக்கொள் ளேன்" என்று ஒரே பிடிவாதமாக மறுத்துக் கூறினான். அதைக்கேட்ட செல்வன் மனம் கலங்கினான். இந்நிலையில் என்ன செய்வது என்று திகைத்த மன்னன், "நீங்கள் இருவரும் நாளை நண்பகலில் வாருங்கள்", என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

அரசனுடைய அரண்மனையில் மரியாதை ராமன்" என்ற நுண்ணறிவுள்ள விகடகவி ஒருவன் இருந்தான். அவனிடம் பெருமதிப்புக் கொண்டிருந்த மன்னன், அன்று நடைபெற்ற விந்தையான வழக் கைப் பற்றி மரியாதை ராமனிடம் தெரிவித்தான். அதற்கு அவன், "கவலை வேண்டாம். வீண்பிடிவாதமுள்ள முரட்டு

மாவுத்தனுக்கு நல்லறிவு புகட்ட நான் வழி செய்கிறேன்", என்று கூறினான்.

பின்னர், மரியாதை ராமன் எவருக்கும் தெரியாமல் செல்வனைக் கண்டு, "நாளைப் பொழுது நீ அரசர்முன் வரவேண்டாம்; நான் சொல்லுகிறபடி செய்து வீட்டிலேயே தங்கி இரு" என்று இன்னும் ஏதோ செய்தி சொல்லிவிட்டுத் தன் இல்லம் திரும்பினான்.

மறுநாள் மாவுத்தன் மட்டும் அரசனிடம் வந்தான். அவனைக் கண்ட வேந்தன், "செல்வன் இன்னும் வரவில்லை; நீ போய் அவனை அழைத்து வா", என்று அனுப்பினான். மாவுத்தன் விரைந்து ஓடிப்போய், செல்வன் வீட்டு வாயிற்கதவை முரட்டுத்தனமாக உதைத்துத் திறந்தான். அதனால், உட்புறம் கதவருகில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த பழைய மண்பாண்டங்கள் நெரி பட்டு உடைந்துபோயின. அதைக் கண்ட செல்வன், "என் பழமையான மண்பாண்டங்களை உடைத்து விட்டாயே; அவற்றை எனக்குக் கொடு," என்று வாதாடினான். "உடைந்த பானைகளை எவ்வாறு கொடுக்க இயலும்? அவற்றுக்கு ஈடாக வேறு பாண்டங்களை வாங்கித் தருகிறேன்", என்றான் யானைப்பாகன்.

செல்வன் அதற்கு இணங்காமல் மாவுத்தனை அரசனிடம் அழைத்துக்கொண்டு போய், "நீண்ட காலமாக ஆண்டுவந்த என் பானைகளை இந்த மாவுத்தன் உடைத்து விட்டான். எனக்கு என் பழைய பானைகளே வேண்டும்", என்று முறையிட்டான். அரசன் மாவுத்தனைப் பார்த்து, "இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?" என்று வினவினான். முரட்டு மாவுத்தன் முன் கோபத்துடன், "**யானைக்கும் பானைக்கும் சரியாய்ப் போயிற்று.** என்னை விட்டு விடுங்கள்", என்று உரைத்தான். மன்னன் அவ்வாறே தீர்ப்பளித்தான். பிறகு அவன் செல்வனை இவ்வாறு செய்யும்படி கற்பித்த மரியாதை ராமனின் அறிவுத் திறமையை மெச்சிப் பாராட்டினான்.

பயிற்சி

1. வினாக்கள் :

1. இறந்த யானையைத் தரும்படி மாவுத்தன் கேட்டதற்குச் செல்வன் யாது கூறினான் ?

2. மாவுத்தன் வழக்குத் தொடர்ந்தபோது மன்னன் யாது கூறினான் ?

3. மரியாதை இராமன் செல்வனிடம் யாது சொல்லியிருந்தான் ?

4. செல்வன் அரசனிடம் கூறிய வழக்கு யாது ?

5. முடிவில் மன்னன் என்ன தீர்ப்பளித்தான் ?

2. தெரிந்துகொள் :

அரசன் மாவுத்தனைப் பார்த்து, "இதற்கு நீ என்ன சொல்லுகிறாய் ?" என்று வினவினான்.

மேலேயுள்ள வாக்கியத்தில் இடப்பட்டுள்ள குறிகளைக் கவனியுங்கள்.

. இது **முற்றுப்புள்ளி** ஆகும். வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

, இது **காற்புள்ளி** எனப்படும். முற்றுப்புள்ளி உள்ள இடத்தில் நிறுத்தும் நேரத்தில் கால்பங்களவே காற்புள்ளி உள்ள இடத்தில் நிறுத்த வேண்டும்.

? இது **வினாக்குறி**. கேள்வி வாக்கியங்களின் முடிவில் முற்றுப்புள்ளிக்குப் பதிலாக வினாக்குறி இடுகிறோம்.

" " இது **மேற்கோள் குறி** ஆகும். ஒருவர் சொன்ன சொற்களை அவர் நேரில் சொல்வதுபோல் எழுதும்போது மேற்கோள் குறிகளை அமைக்க வேண்டும்.

சிறுவர்களே ! இது விந்தையினும் விந்தையே !

! இது **வியப்புக் குறி** எனப்படும். வியப்பு, அச்சம் முதலிய உணர்ச்சிகளைக் குறிக்குமிடங்களில் வியப்புக் குறியை இடவேண்டும்.

. , ? " " ! இவைகள் **நிறுத்துக்குறிகள்** எனப்படும். ஒரு பாடத்தைப் படிக்கும்பொழுது பொருள் விளங்கும்பொருட்டு எங்கெங்கு எவ்வளவு நேரம் நிறுத்தவேண்டுமென்று இந்த நிறுத்துக்குறிகள் தெரிவிக்கின்றன.

31. வானவில்

1. வான வில்லைப் பாருங்கள்,
மனத்தில் மகிழ்ச்சி கூறுங்கள்!
கானஞ்செழிய மழையைப் பொழியுங்
கார் விளங்கும் பொழ்திலே. (வான)

2. வட்டத்தி லொரு பாதிபோல்
வடிவு கொண்டு தோணுதே!
சட்டமாக நிறங்க ளேழும்
தகுதி யாகக் காணுதே. (வான)

3. ஊதா நீலி நீலமும்
ஓங்கு பச்சை மஞ்சளும்
சாதாகிச்சிலி சிவப்பும் என்று
சாற்று வாரே பேர்களே. (வான)

4. அந்தி மாலை கிழக்கிலும்
அணிகொள் காலை மேற்கிலும்
வந்துதோன்றும் பெருமை கொண்ட
வான வில்லைக் கவனிப்பீர்! (வான)

5. கண்ட போதெல்லாம் மனங்
களிப் படைந்து துள்ளுதே!
விண்டலத்தி லிதனைக் கண்டு
வியந்தி டாதார் யாவரே? (வான)

—வித்துவான் முத்து சு. மாணிக்கவாசகம்

பயிற்சி

1. சொல்வளம் :

கூருங்கள் = அடையுங்கள்; கானம் = காடு; கார் = மேகம்; சட்டமாக = ஒழுங்காக; சாற்றுவார் = சொல்லுவார்; அணிகொள் = அழகுள்ள; விண்டலத்தில் = ஆகாயத்தில் (விண் + தலத்தில்); வியந்திடாதார் = வியப்படையாதவர்.

2. வினாக்கள் :

1. வானவில் காலையில் எத்திசையில் தோன்றும்? மாலையில் எத்திசையில் தோன்றும்?

2. வானவில்லில் காணும் ஏழு நிறங்கள் யாவை?

---

32. பேராசையின் பயன்

(கதையின் முற்பகுதி)

தனபால் என்ற ஒரு வணிகர் அயலூர் வாரச் சந்தைக்குச் சென்றுவிட்டுத் திரும்புங்கால் இருட்டி விட்டது. அவர் தமது ஊர்ப்புறத்திலுள்ள குளத்தின் கரையில் கையிலிருந்த பணப் பையை வைத்து விட்டுக் கால்கைகள் கழுவுவதற்காகத் தண்ணீரில் இறங்கினர். பிறகு, மேலே வந்து பணப் பையை எடுத்துக்கொள்ள மறந்து, வீடுபோய்ச் சேர்ந்தார். அங்குப் பணப் பையின் நினைவு வந்ததும், மீண்டும் குளக்கரைக்குச் சென்று பார்க்கையில் அது காணப் படவில்லை. வீடு திரும்பிய அவர் இரவு முழுவதும் கவலைகொண்டு உறக்கமற்றிருந்தார்.

மறுநாட் காலையில் தனபால் தம் வேலைக்கார னுகிய வீரப்பனிடம் விவரத்தைத் தெரிவித்தார். அவர், தமது பணப் பையைக் கண்டெடுத்தவர் திருப்பிக் கொடுத்தால், அதில் வைத்திருந்த தொகை யில் பாதியை அவருக்குப் பரிசளிப்பதாகக் கூறினுர்; இச் செய்தியை ஊரிலுள்ள பலருக்கும் அறிவிக்கு மாறு அவனுக்குக் கட்டளையிட்டார். வீரப்பனும் அவ்வாறே செய்தான்.

கோபால் என்ற ஓர் உழவர் அந்தப் பணப் பையைக் கண்டெடுக்க நேர்ந்தது. அவர் அப் பையைத் தனபாலிடம் கொண்டுபோய்ச் சேர்ப் பித்து, அவர் விளம்பரஞ் செய்தவாறு பாதித் தொகையைப் பரிசாகத் தர வேண்டினுர். ஆனுல், பேராசைகொண்ட தனபால் தமது பையில் ஓராயிரம் ரூபாய் இருந்ததாகவும், அதில் பாதித்தொகையைக் கோபாலே எடுத்துக்கொண்டு விட்டதாகவும் கூறி, பரிசுத் தொகையைக் கொடுக்க மறுத்தார்; அவர்மீது திருட்டுக் குற்றமும் சாற்றி, வழக்குத்தொடருவதாகவும் அச்சம் உறுத்திஞர். உடனே கோபால் ஒரு வழக்கறிஞர் வாயிலாகத் தமது வழக்கை அவ்வூர் நீதிபதியிடம் முறை யிட்டுக்கொண்டார்.

நாடகப் பகுதி

இடம்: நீதி மன்றம்.

நேரம்: பகல்

உறுப்பினர்: நீதிபதி, வழக்கறிஞர், கோபால் (வாதி), தனபால் (பிரதிவாதி), சேவகர் முதலிய வர்கள்.

(சில வழக்குகள் விசாரிக்கப்பட்ட பிறகு கோபாலின் வழக்கு எடுக்கப்படுகிறது.)

நீதிபதி: (சேவகனைப் பார்த்து) வாதி, பிரதிவாதிகளைக் கூப்பிடு.

சேவகன்: கோபால்! கோபால்!! கோபால்!!!

தனபால்! தனபால்!! தனபால்!!!

(இருவரும் வருகிறார்கள்.)

(முதலில் சாட்சிக் கூண்டில் கோபால் ஏறி தாம் கூறுவது உண்மையென்று உறுதிகூறுகிறார்.)



நீதி மன்றம்

நீதிபதி: (கோபாலைப் பார்த்து) உமது வழக்கு யாது?

கோபால்: மாலையில் இருட்டிய பிறகு, வயலிலிருந்து வீட்டிற்கு வரும் வழியில்

குளத்திற்குக் குளிக்கச் சென்றேன். கரை யேறி வருகையில், ஒரு பணப் பை காலில் இடறியது. காலையில் விசாரித்து அதன் சொந்தக்காரரிடம் சேர்க்க எண்ணி, அதை என் வீட்டுக்கு எடுத்துச் சென்றேன். பிரதி வாதியின் வேலைக்காரன் வீரப்பன் மறுநாட் காலையில் தெருவில் வந்து, தன் தலைவரா கிய தனபால் தமது பணப் பையைக் குளக் கரையில் வைத்து மறந்து வந்துவிட்டதாக வும், அதை எடுத்தவர் கொடுத்தால் பாதித் தொகையைப் பரிசாக வழங்குவாரென்றும் தெரிவித்தான். உடனே, நான் பையை எடுத்துக்கொண்டு பிரதிவாதியிடம் போய்க் கொடுத்துவிட்டு, பரிசுத் தொகையைத் தர வேண்டினேன். அதை அவர் கொடுக்க மறுத்துவிட்டார். அவரது சொற்படி பாதித் தொகை எனக்குக் கிடைக்குமாறு நீதிபதி யவர்கள் தீர்ப்பு அளிக்க வேண்டுகிறேன்.

(கோபால் கூண்டை விட்டு இறங்குகிறார்; தனபால் கூண்டில் ஏறுகிறார்.)

நீதிபதி: (பிரதிவாதியைப் பார்த்து) உமது மறுமொழி யாது?

தனபால்: நான் குளக்கரையில் பணப் பையை வைத்து மறந்தது மெய்யே; பாதித்

தொகை பரிசு தருவதாகச் சொன்னதும் உண்மையே. அந்தப் பணப் பை இதோ இருக்கிறது.

(பையைப் பணத்துடன் மேசையின்மேல் வைக்கிறார்.)

நீதிபதி : (வாதியின் வழக்கறிஞரைப் பார்த்து) நீர் குறுக்கு விசாரணை செய்யலாம்.

வாதியின் வழக்கறிஞர் : (பிரதிவாதியைப் பார்த்து) அப்படியானால் நீர் ஏன் பரிசுத் தொகையைக் கொடுக்க மறுக்கிறீர்?

தனபால் : அந்தப் பையில் ஆயிரம் ரூபாய் வைத்திருந்தேன். இப்பொழுது அதில் ஐந்நூறு ரூபாய்தான் இருக்கிறது. பாதித் தொகையை கோபாலே எடுத்துக் கொண்டிருக்கவேண்டும். ஆதலால் பரிசு கொடுக்கத் தேவையில்லை.

வாதியின் வழக்கறிஞர் : (நீதிபதியைப் பார்த்து) பிரபுவே! பிரதிவாதி சொல்வது நம்பத் தக்கதன்று. வாதி உண்மையுள்ள ஓர் ஏழைக் குடியானவர். அப்படி அவர் பிரதிவாதியை ஏமாற்றுவதானால் பையிலுள்ள முழுத்தொகையையுமே தமக்கு வைத்துக்கொண்டு வெளியில் பிறருக்குத்

தெரிவிக்காமல் இருந்திருப்பாரே. ஆதலால் வாதிக்கு முறை வழங்க வேண்டுகிறேன்.

நீதிபதி: (பிரதிவாதியின் வழக்கறிஞரைப் பார்த்து) நீர் என்ன சொல்லுகிறீர்?

பிரதிவாதியின் வழக்கறிஞர்: பிரதிவாதி தனபால் இந்த ஊரில் ஒரு பெரிய வணிகர். அவர் சொன்ன சொல் தவறமாட்டார். வாதியே பாதித் தொகையை எடுத்துக் கொண்டுவிட்டபடியால் பிரதிவாதி இனும் தொகை கொடுக்கக் கடமைப்பட்டவரல்லர். ஆகையால், இந்த வழக்கைத் தள்ளுபடி செய்ய நீதிபதியை வேண்டுகிறேன்.

நீதிபதி: (பிரதிவாதியைப் பார்த்து) பையில் பணத்தை ரூபாய்களாக வைத்திருந்தீரா? அல்லது நோட்டுக்களாக வைத்திருந்தீரா?

தனபால்: ஆயிரம் ரூபாயும் முழு ரூபாய்களாகவே இருந்தன; நோட்டுக்கள் இல்லை.

நீதிபதி: இந்தப் பையில் ஆயிரம் ரூபாய் இருந்ததாகப் பிரதிவாதி சொல்லுகிறார். இப்பொழுது இதில் ஐந்நூறு ரூபாய்

இருக்கிறது. இந்தப் பை இன்னும் எவ்வளவு ரூபாய் கொள்ளும் என்று ரூபாயை எண்ணிப் போட்டுப் பார்ப்போம். (ரூபாயை எண்ணிப் போடுகிறார் ; இருநூறு ரூபாய் மட்டுமே அதிகம் கொண்டது.) இந்தப் பையில் ரூபாய் எழுநூறுதான் அடங்கும். ஆதலால் இதே பையில் ஆயிரம் ரூபாய் வைத்திருந்ததாகச் சொல்வது முற்றிலும் பொய். இதிலிருந்து, வாதி உண்மையுள்ளவர் என்பதும், பிரதிவாதி பேராசையுள்ளவர் என்பதும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகிறது. (பிரதிவாதியைப் பார்த்து) நீர் சொல்லுகிற ஆயிரம் ரூபாய் வைத்திருந்த பை இஃது அன்று. ஏனெனில், இதில் எழுநூறு ரூபாய்தான் அடங்குகிறது. ஆதலால், இந்த ஐந்நூறு ரூபாய்ப் பை உமக்குச் சொந்தமானது அன்று. உமது ஆயிரம் ரூபாய் கொண்ட பை அகப்பட்டால் உம்மிடம் அது சேர்ப்பிக்கப்படும். (வாதியைப் பார்த்து) இந்தப் பையைப் பணத்துடன் நீரே எடுத்துக்கொள்க.

(தனபால் வெட்கித் தலை குனிந்துகொண்டு போகிறார் ; நீதிமன்றத்தில் கூடியிருந்தோர் " உள்ளதையும் இழக்க நேர்ந்தது பேராசையின் பயன் " என்று பேசிக்கொள்கிறார்கள். கோபால் பணப் பையுடன் மகிழ்ச்சியாக வீட்டுக்குப் போகிறார்.)

பயிற்சி

1. சொல்வளம் :

வாதி=வழக்குத் தொடுப்பவன்: பிரதிவாதி = வாதிக்கு எதிரி; நீதிபதி = நியாய விசாரணை செய்பவர்; வழக்கறிஞர்=வக்கீல்; பேராசை = அளவுக்குமிஞ்சிய ஆசை.

2. விஞக்கள் :

1. தனபால் தாம் இழந்த பணப் பையைத் திரும்பப் பெறுவதற்கு வேலைக்காரனிடம் யாது கூறினர் ?

2. பரிசு வேண்டிய கோபாலுக்குத் தனபால் என்ன மறுமொழி உரைத்தார் ?

3. தனபால் கூறியது பொய்யென்று நீதிபதி எவ்வாறு மெய்ப்பித்தார் ?

4. நீதிபதி அளித்த தீர்ப்பு யாது ?

3. நடித்தல் :

வகுப்பு மாணவர்கள் பலர் சேர்ந்து இந்த நாடகத்தை நடித்துக் காட்டவும்.

செய்யுட் பகுதி

1. நல்வழி

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தஅவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்
[ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல். 1

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 3

ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. 4

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 5

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான். 6

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 7

ஆறிடு மேடும் மடுவும்போல் ஆஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 8

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். 9

கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்
[வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 10

2 நீதி வெண்பா

தாமரைபோன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என். 1

செய்யும் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே—செய்யவோரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கோன்றமறைப்
போற்கோடியைச் சேர்துயரம் போல். 2

ஈக்கு விடந்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கோடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். 3

கோம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வேம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசேறி
தீங்கினர்தங் கண்ணிற் றெறியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. 4

அவ்விய நெஞ்சத் தறிவிலாத் துர்ச்சனரைச்
செவ்விய ராக்குஞ் சேயலுண்டோ—திவ்வியநற்
கந்தம் பலவுங் கலந்தாலும் உள்ளியது
கந்தம் கேடுமோ கரை. 5

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூரம் ஆமோ கடலுப்புப்—போற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். 6

சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி. 7

இன்னல் தரும்பொருளை யீட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்ன(து)
அழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம். 8

பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 9

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு. 10

3. சதகம்

1. ஈயாதார் வாழ்வு பயனற்றது

கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின்
கனிகள்உப கார மாகும்
சிட்டரும்அவ் வணம்தேடும் பொருளையெல்லாம்
இரப்பவர்க்கே ஈந்து வாழ்வார்.
மட்டுலவும் சடையாரே தண்டலையா
ரேசொன்னேன் வனங்கள் தோறும்
எட்டிமரம் பழுத்தாலும் ஈயாதார்
வாழ்ந்தாலும் என்உண் டாமே!

தண்டலையார் சதகம்

2. செய்ய வேண்டாதன

பெற்றதாய் தந்தைகள் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல் வேண்டா;
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல் வேண்டா;
உற்றவர்கள் போல்உட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பல் வேண்டா;
ஒருவருக்கு இச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்
ஊமைபோல் நிற்றல் வேண்டா; [சபையில்
சற்றுமே பொறுமைஇல் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கல் வேண்டா;
தைரியந் தனில்விக்கிர மாதித்தன் என்னினும்
தன்னையே புகழ்தல் வேண்டா;

மற்றொன்றும் எண்ணாது செய்யல்வேண் டாமென்பர்;
மணவாள நாரா யணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே!
வரதவேங் கடரா யனே!

திருவேங்கட சதகம்

3. கோபத்தின் கொடுமை

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்கும்;
கோபமே யொன்றையும் கூடிவர வொட்டாது;
கோபமே துயர்கொடுக்கும்;
கோபமே பொல்லாது; கோபமே சீர்கேடு;
கோபமே யுறவறுக்கும்;
கோபமே பழிசெய்யும்; கோபமே பகையாளி;
கோபமே கருணைபோக்கும்;
கோபமே யீனமாம்; கோபமே யெவரையுங்
கூடாம லொருவனுக்கும்;
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற்றள்ளுமால்;
ஆபத்தெலாந் தவிர்த் தென்னையாட் கொண்
[டருளும்
அண்ணலே! அருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே!

அறப்பளீசுர சதகம்

4. தேசிங்கு ராசன் பாட்டு

[தேசிங்கு ராசன் பாராசாரி என்னும் குதிரையை
அடக்கிச் சவாரி செய்தல்]

புலிக்குட்டிபோலப் பாய்ந்தவனும்
புரவி யேறினனும்;
ஏறினவுடனே பாராசாரி
என்ன செய்யுதுபார்.
தடதடவென்று தவிக்குதுபார்
அந்தக் குதிரைதானும்
கடகடவென்று கிளம்பிக் குதிக்குது
அந்தக் குதிரைதானும்
லகானைஇழுத்துச் சிமிட்டாக்கொடுத்தான்
ராசா தேசிங்கு;
சிமிட்டாக்கொடுத்த வேகத்தினுலே
சீறிப் பாய்கிறது;
காடுமலைகள் செடிகள்எல்லாம்
கலங்கி நடுங்கிடவே;
குன்றுமலைகள் தாண்டிக்குதிரை
குதித்துப் போகிறதாம்.

குதிரைதட்டின வேகத்திலே
  குழந்தை தேசிங்கு
குலுங்கநகைத்துச் சிமிட்டாக்கொடுத்தான்
  குதிரைக் காலுலும்
அங்கிருந்தே குதிரையைத்திருப்பினன்
  அந்தப் பாலகனும்;
பாராசாரி மனதுகலங்கிப்
  பார்த்து நிமிர்ந்ததுபார்.
பார்த்தவுடனே தேசிங்குபாலன்
  புரவியை என்னசெய்தான் ?
மேள்ளசிமிட் டாக்கோடுத்து
  மேதுவாய் வாரானே;
பக்கம்சிமிட் டாக்கோடுத்துப்
  பாலன் வாரானே;
கலகல கலகல கலகலவேன்று
  கனைத்து வருகுதுபார் !
அந்தச்சமயத்தில் வந்துநிறுத்தினன்
  அந்தப் பாலகனும்;
பாராசாரியைக் கோண்டுநிறுத்தினன்
  பாலசூரியன் போலே;
நிறுத்தினஉடனே புட்பமாரி
  நிலையாய்ப் போழிந்தாராம்.

[ஆர்க்காடு நவாப்பின் தூதன் தோன்றமல்லன் தேசிங்கு ராசனிடம் கப்பப் பணம் கேட்டபொழுது தேசிங்கு வீரத்துடன் மறுமொழி கூறுதல்]

பல்லைப் படபட வென்று
கடித்தானையா ராசா தேசிங்கு;
கையைத் தூக்கிக் கனைத்துத்
தட்டினான் ராசா தேசிங்கு;
இனியில்லாத கோப மாச்சுது
அந்த ராசாவுக்கா னலும்
கோபத்தினாலே கட்டி யவனைக்
கொல்ல வெழுந்தா னும்.
பார்த்தவுடனே தோன்ற மல்லனும்
பதைத்து விழுந்தா னும்;
விழுந்தவுடனே சலாஞ் செய்து
வேண்டிக் கொண்டா னும்;
தலையை யசைத்துத் தோளை
நெறித்தான் ராசா தேசிங்கு
கண்களையுருட்டிக் கதும்பின னையா
காளை சிங்கம் போல.

---

5. கட்டபொம்மன் பாட்டு

[ஆங்கிலக் கம்பெனியார் பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்முவிடம் நெல்லும், வரிப்பணமும் கேட்டபொழுது அவன் தம்பி குமாரசாமி என்னும் ஊமைத்துரை கூறியது.]

வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் கும்பினிக் கேன்கொடுப்பேன்
சீனிச் சம்பாநெல்லு ஏன்கொடுப் பேன்அந்தச்
சீரகச்சம் பாநெல் ஏன்கொடுப்பேன் ?

என்னைப்போல் வெள்ளாண்மை இட்டா னேதுரை
இங்கி லீசுவெள்ளைக் காரனுந்தான்
மன்னவன் கும்பினி வந்தாக் கால்கத்தி
வாள்முனை யில்கிஸ்திப் பணமென்றான்.

தானிய தவச மேன்கொடுப் பேன்குலத்
தம்பிரா னேஅந்தக் கும்பினியான்
நானும் உழுது விரைக்கும் போதுஅவர்
தானு முழவுக்கு வந்தாரோ ?

உழவுத் தளைக்கு வந்தாரோ வந்து
உழவே ருதுகள் மேய்த்தாரோ
களை முளைகள் எடுத்தாரோ அங்கே
கஞ்சித்தண் ணீர்கொண்டுவந் தாரோ ?

சனமோ சாதியோ கும்பினி யான்நமது
சம்பந்தக் காரனே கும்பினியான்
மனது போலே நடப்பே னேதிசை
மகிழும் கம்பளச் சிங்கேறு.

எத்திசை யும்புகழ் ஊமைத் துரையென்று
எண்ணாமல் கேட்டானே கிஸ்திப்பணம்
சத்துரு வானனே கும்பினி யானவன்
சமத்தைப் பார்க்கிறேன் கம்பளத்தான்.

[கும்பினி = ஆங்கிலக் கம்பெனி]

[இராமநாதபுரத்திலுள்ள இராமலிங்க விலாசம் என்னும் கட்டடத்தில் தன்னை வந்து சந்திக்கும் படி கம்பெனி கலெக்டர் ஜாக்ஸன் என்பவன் கட்ட பொம்முவுக்குக் கடிதம் அனுப்பினன். கட்டபொம்மு தமது தம்பிமார்களுடனும், 1000 கம்பளத் தாருடனும் இராமநாதபுரம் போய்ச் சேர்ந்தார். அப்பொழுது கட்டபொம்மு தனியாக வரவேண்டு மென்று ஜாக்ஸன் தெரிவித்தான். அவன் வஞ்சகமாகத் தம்மைச் சிறைப்பிடிக்க இந்த ஏற்பாடு செய்துள்ளான் என்று கட்டபொம்மு உணர்ந்தார். என்றுலும் இவ்வளவு தூரம் வந்த பிறகு சும்மாத் திரும்புதல் இளப்பம் ஆகும் என்று நினைத்தார். அப்போது ஊமைத்துரை கூறிய வீரவுரை கீழ்வரும் பகுதியாகும்.]

வினை முகத்துக்கு அஞ்சாத ஊமையன்
சினந்து வேகங்கோண் டேதுசோல்வான்
பனை மரத்திலே யேறலாமா ஏறிப்
பாளை தோடாமல் இறங்கலாமா ?

சங்குசுட் டால்வெண்மை போய்விடு மோபசுந்
தங்கம் கேட்டால்நிறங் குன்றிடுமோ
சிங்கத்தின் முன்னே நரியெதிரோ துரைச்
சிங்கம் நரிக்குப் பயப்படுமோ?

பாஞ்சைப் பதிக்கோரு வேங்கைப் புலிநானும்
பாளையங் கோட்டை மதப்புலிநான்
காஞ்சபால் ரோம்பக்கசக்கு தேன்றுன் ரத்தம்
கண்டால் மனத்திட மாகுமேன்றுன்.

[பிறகு தானுதிபதி சுப்பிரமணியப் பிள்ளை யுடன் கட்டபொம்மு தனிமையாக ஜாக்ஸன் துரையைப் பார்க்கச் சென்றுர். அப்பொழுது கட்ட பொம்முவின் படை இராமலிங்க விலாசத்தின் வெளியில் வைக்கப்பட்டது. "உள்ளே ஏதேனும் கலகம் நேர்ந்தால் குரல் கொடுக்கிறேம். உடனே உள்ளே வந்துவிடுங்கள்" என்று சொல்லிக் கட்டபொம்மு கீழ்வரும் பகுதியில் தம் படையை எச்சரிக்கிறுர்.]

மேல்வீடு வாசல் முகப்பினிலே காவல்
வேள்ளையத் தேவனைத் தானிருத்தி
ஆல காலவிடம் போலே கட்டமோம்மு
ஆக்கிர மித்துச்சேதி சோல்லுவராம்.

எச்ச ரிக்கையாகி நிற்கவேணும் நம்மோ
டேதிர்த்த பேரை மடக்கவேணும்
அச்சமில் லாமலே நிற்கவே ணும்வலு
மிச்சமாய் வேட்டைக ளாடவேணும்.

கூக்குரல் சத்தங்க ளானுக்கா லிங்கே
குலவைச் சத்தங்க ளாகவேணும்
சீக்கிர மாயோன்று கூடவே ணுஞ்சேக
சாலஞ் செய்துவேளி யேறவேணும்

என்றல்லோ உத்தார வுகோடுத்து அங்கே
சேன்றுனே கட்டபோம் மேந்திரதுரை
நன்ருகப் பேட்டிகள் செய்வோமேன்று அங்கே
நாக ரிகமாகத் தான்நடந்து

கட்ட போம்முதுரை தாஞ பதியுடன்
கண்டாரே சாகீசன் மேசரைத்தான்.

[சாகீசன் = ஜாக்ஸன்]

---

6. வாழிய செந்தமிழ்!

வாழிய சேந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றேமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தேய்துக! தீதேலாம் நலிக!

TAMIL MALAR VACHAGAM

BOOK IV

Vidvan T. S. Kulandaivel Mudaliar

V. S. VENKATARAMAN & Co.

Educational Publishers

Head Office :
Sri Veda Vinayagar St.,
KUMBAKONAM.

Branch Office :
144, Sri Ramakrishna Math Road
MYLAPORE :: MADRAS 4

Price: As. 12=75 Naye Paise